விலை சதம் 5

முதற் பதிப்பு

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்,"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.
Phone: 3411

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஸ்ரீ கார்த்திகை மீ 21வ சனிக்கிழமை — Colombo, December, 6 1947 — ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 22 | இதழ் 185

சர்வகலாசாலையில் விஞ்ஞான மகாநாடு

விஞ்ஞானவளர்ச்சி இலங்கையின் முன்னேற்றத்திற்கு அவசியம்

பேராசிரியர் கந்தையாவின் யோசனைகள்

கொழும்பு, டிச. 5

இலங்கை விஞ்ஞான சங்கத்தின் மூன்றாவது வருடாந்த விழா இன்று சர்வகலாசாலை ஜியார்ஜ் மன்னர் மண்டபத்தில் பிரதமர் திரு டி. எஸ். சேனநாயக்காவால் திறந்து வைக்கப்பட்டது.

பேராசிரியர் ஏ. கந்தையா தலைமை வகித்தார். அவரது தலைமைப்பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:-

கர்நாடகமான கிராமப்பொருளாதாரத்துக்குப் பதிலாக திட்டமிடப்பட்ட விவசாயத் தொழில் முறைகள் புகுத்தப்படவேண்டும். தொழிலாளரிடையே அதிருப்தி தோன்றுவதற்குக் காரணமான விஷயங்களை நீக்கிக் களைய வேண்டும்; வாழ்க்கைத்தர உயர்வுக்கு அடிகோல வேண்டும்.

இலங்கையின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சி விஞ்ஞான வளர்ச்சியிலேயே தங்கி இருக்கிறது.

இலங்கையில் நெற்பயிர் சம்பந்தமாக நாம் அதிக கவனம் எடுத்து முடிந்த அளவு நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். இதர பருப்பு வகைகள், நெய் வகைகள், காய்கறி, முட்டை, மீன் வகைகளைப் பெருக்கவேண்டும். தன் தேவைக்குப் போதுமான உணவு இருக்கும் ஒரு நாடுதான் பொருளாதார வீழ்ச்சி நேரக்கூடிய நிலைமையைச் சற்று சமாளிக்கக் கூடியதாய் இருக்கும்.

"இலங்கை ஒரு விவசாய நாடாய் இருந்தாலும் அதனது பொருளாதாரம் தேயிலைத்தோட்டங்கள் போன்றவற்றிலே தங்கி இருக்கிறது. இவையே நமது ஏற்றுமதியில் 90 வீதத்தை வகிக்கின்றன. மேலும் நமது பயிர்ச்செய்கை செய்யப்பட்ட நிலத்தில் பாதியை இத்தோட்டங்களே வகிக்கின்றன ஆனால் தோட்டங்களில் தங்கி இருக்கும் பொருளாதாரம் மிக ஆபத்தானது என்பது பிரத்தியட்சம்.

ஆகையினாலே புதிய பிரதேசங்களில் உணவுப் பயிர்களை விதைக்கவேண்டியது அவசியமாகிறது. புதிய விவசாயத் திட்டத்தில் கூட்டுறவு விவசாயம், கடன் பளு நீக்கம், தகுந்த நீர்ப்பாசனவசதி, உயர்ந்த ரக விதைகள், உயர்ந்த பசளைவகைகள், நல்ல கால் நடைகள் யந்திரங்கள், முதலியன இடம்பெற வேண்டும்.

விவசாயத்தில் மட்டும் நாம் அக்கறைப்பட்டு அதில் முன்னேறிவிடுவதால் மட்டும் இலங்கையின் வறுமை நீங்கிவிடாது. ஆகையினாலே இலங்கை ஒரு தொழில் வளர்ச்சிக் கொள்கையில் இப்போது செல்கிறது. தொழிலபிவிருத்தி தான் பொருளாதார நிலையைச் சமன்படுத்தி வறுமை, அறியாமைநோய் என்பவற்றைநீக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி உலகப் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கும் வல்லமையை நமக்கு அளிக்கும்.

தொழில் வளர்ச்சித்திட்டம் வகுக்கும்போது நாட்டில் கரி, காஸ், எண்ணெய், முதலியவை இல்லை என்பது நமது கவனத்தில் இருக்கவேண்டும்.

சீனி சர்க்கரைக் தொழில் நமது நாட்டில் பெருவளர்ச்சி அடைவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. இதனை உற்பத்தி செய்வதன் மூலம் நாட்டில் இருந்து பல கோடி ரூபாய் வெளியேறுவதைத் தடைசெய்ய முடியும் அத்துடன் பல்வேறு உபயோகங்களுக்கான பல உப பொருட்களும் உற்பத்திசெய்ய முடியும்

காஸ், பெட்ரோல் முதலியன இல்லாத குறையை நிவர்த்திக்க மலிந்த செலவில் மின்சார சக்தியை உற்பத்தி செய்யவேண்டும். இலங்கையில் சக்திமிகுந்த பெரிய அருவிகள் 20க்கு குறையாமல் இருக்கின்றன. நாட்டுக்குத் தேவையான மின்சார சக்தியை இவற்றில் இருந்து உற்பத்தி செய்ய முடியும். இவற்றைக் கட்டுப்படுத்தி எங்கள் புதிய தொழில்களைப் போஷிக்க வேண்டும். நீர் மின்சார சக்தி இல்லாமல் எவ்வித உண்மை முன்னேற்றமும் முடியாது.

இச்சக்தி மலிந்த விலையில் கிடைக்க ஆரம்பித்ததும், சீமெந்து, கண்ணாடி, செயற்கைப் பசளை, பல திராவகங்கள், மருந்து வகைகள், தாவர நெய், அவசிய எண்ணெய் வகைகள் ஆகியவற்றையும் இன்னும் பல பொருட்களையும் உற்பத்தி செய்யவேண்டும்.

இந்த வசதிகளை ஏற்படுத்துவதுடன் தொழில் நுணுக்கங்களும் விஞ்ஞான அறிவும் படைத்த நிபுணர்களும் தேவை.

நாட்டிலே இருக்கும் இலவசக்கல்விமுறையை ஒரு ஏழைச்சிறுவனும் உபயோகப்படுத்தி முன்னேறுவதற்கு சகாய நிதிகள் வேண்டும். இதன் மூலம் இலவசக் கல்வியால் நாட்டில் அமித செலவேற்படாமல் பாதுகாக்கலாம்.

எங்கள் முன்னே இருக்கும் பிரச்னைகளைச் சமாளிக்க நாட்டின் விஞ்ஞானத் திறமை எல்லாவற்றையும் ஒன்றுசேர்க்க வேண்டும்.

ஆகையினாலே ஒரு தேசிய ஆராய்ச்சி சபை விஞ்ஞான தொழில் அபிவிருத்திக்காக நிறுவ வேண்டும். இதில் விஞ்ஞானத் துறைகள் எல்லாவற்றின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்க வேண்டும். கீழ்க்கண்ட காரியங்களை இச்சபை செய்ய வேண்டும்.

1. தேசியத் தேவைகளை அநுசரித்து விஞ்ஞான ஆராய்ச்சியின் பாதையைத் திட்டமிடல்.
2. குறித்த சில ஆராய்ச்சிகள் சம்பந்தமாக ஆலோசனை கூறல்.
3. விஞ்ஞான நிபுணர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும், தேவையான ஆட்களைத் தருவதிலும் ஆலோசனை கூறுவதோடு இதர உதவிகளும் செய்தல்.
4. விசேஷ தேசிய ஆராய்ச்சிக் கழகங்களை நிறுவுவதற்கு ஆலோசனை கூறல்.

இது தவிர ஒரு விஞ்ஞானக் காட்சி சாலையை கொழும்பு பொருட்காட்சிச் சாலைக்குச் சமீபம் நிறுவவேண்டுமென நான் வேண்டுகிறேன்.

அதிகரிக்கப்பட்ட வரிகளின் பலாபலன்கள்

பொது மக்களுக்கு அதிக கஷ்டங்கள்

கொழும்பு, டிச. 5

சமீபத்தில் அதிகரிக்கப்பட்ட இறக்குமதி வரியினால் மந்திரிமார் குறிப்பிட்ட பொருள்களை விட அநேகமாக மற்றும் பொருள்களின் விலைகளும்திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் சமீப நாட்களில் வாழ்க்கைச்செலவு மிகவும் அதிகரித்துவிட்டது. சுங்க இலாகா அதிகாரிகளோ அல்லது வர்த்தகர்களோ அதிகரிக்கப்பட்ட வரிகள் விபரத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததுதான் இவ்விதம் திடீரென எல்லாப் பொருள்களின் விலைகளும் உயர்த்தப்பட்டதற்குகாரணமென்று கூறப்படுகிறது. இவற்றினால் ஏழை மக்கள்தான் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

புதிய அதிகரிக்கப்பட்ட வரிகள் பற்றியும் அவ்வப் பொருள்கள் பற்றியும் கெஜட்டில் பிரசுரிக்கப் பட்டிருந்தது. ஆனால் அப்பொருள்கள் இந்த வரி அதிகரிப்பதற்கு முன்னிருந்த நிலைமைபற்றி கெஜட்டில் குறிப்பிடப்படவில்லை. பழைய வரிகளையும்குறிப்பிட்டிருந்தால் அதிகரிக்கப்பட்ட வரிகள்பற்றி திட்டமாக அறிந்துகொள்ள முடிந்திருக்கும். இதனால் வர்த்தகர்கள் தங்களிடம் இருப்பில் இருந்த எல்லாப் பொருள்களுக்கும் விலையை அதிகரித்துவிட்டனர். முன்னையிலும் பார்க்க இப்பொழுது அதிக விலை கொடுத்தே பொருள்களை வாங்க வேண்டியிருக்கிறது. வரிகள் அதிகரிக்கப்பட்டதால் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டன. விலை கூடிவிட்டதால் பொருள்கள் விற்பனை குறைந்துவிடுமென்று வர்த்தகர்கள் பயப்படுகின்றனர். இதனால் வெளிநாடுகளில் பொருள்களுக்கு ஆடர் செய்திருந்தோர் தங்கள் தங்கள் ஆடர்களை ரத்துச் செய்தோ அன்றி அவற்றை சரிபாதியாக குறைத்தோ விட வேண்டுமென்று இப்பொழுது விரும்புகின்றனர். வீணாக பொருள்களை வாங்கி அவை விலையாகாது விட்டால் பின்னர் தங்களுக்கு அதிக கஷ்டங்கள் வரலாமென்று அவர்கள் கருதுகின்றனர்.

வரவு செலவுத் திட்ட விவாதக் கட்டுப்பாடு

12 தினங்களுக்குள் முடிக்க வேண்டும்

கொழும்பு, டிச. 5

பாராளுமன்றக் கமிட்டி மாறி வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி 12 நாட்களிலோ அல்லது அதற்குட்பட்ட நாட்களிலோ விவாதித்து முடிக்க வேண்டுமென்று அரசாங்கப் கருதுவதாக ஒரு தீர்மானத்தை பிரதிநிதிகள் சபையில் இம்மாதம் 10ந் தேதி புதன்கிழமை அரசாங்க கட்சித் தலைவர் கொண்டு வருவார்.

'கால்கட்டுடன்கூடியசுதந்திரம்'

பிரிட்டிஷ் அரண்மனையில் சோவியத் மந்திரிக்கு விருந்து

பாகிஸ்தான் ஹைகமிஷனரும் பிரசன்னம்

லண்டன், டிச. 3

ஜெர்மன் சமாதான உடன்படிக்கை சம்பந்தமாக இன்று நடைபெற்ற 4 வல்லரசுகளின் அந்நியநாட்டு மந்திரிகள் கூட்டத்தில் சோவியத் பிரதிநிதி மோலடோவ்யால்டா, போட்ஸடாம் முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு சமாதான உடன்படிக்கையை அமைக்கவேண்டுமென்றும் தெரிவித்தார்.

அதற்கு அமெரிக்க பிரதிநிதி மார்ஷல், அந்த முடிவுகளை ரஷியா ஒரு போக்கிலும் மற்றவர்கள் வேறு போக்கிலும் அர்த்தம் செய்யக்கூடியவைபாக இருக்கின்றனவென்றார். பிரெஞ்சு பிரதிநிதி பிடால்ட் இப்படிப் பேசிப பொழுதைக் கழிப்பதைவிட வீடு திரும்புவது நல்லது என்றார். அதன்பேரில் ரஷியா தனது யோசனையை வற்புறுத்தவில்லை.

சமாதான உடன்படிக்கை சம்பந்தமாக முடிவு செய்ய நடவடிக்கைகளை வகுக்கும்படி உதவி அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாட்டுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இன்று பிரிட்டிஷ் மன்னரும் மகாராணியும் 4 அந்நிய நாட்டு மந்திரிகளுக்கும் பக்கிங்ஹாம் அரண்மனையில் விருந்தளித்தனர். கிளாஸ்டர் கோமகனும் கோமகளும் கிரேக்க இளவரசியும் கிளாஸ்டர் கோமகன் மைத்துனியுமான இளவரசி மாரியாளும் விருந்தில் கலந்துகொண்டனர் பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லி, உதவிப் பிரதமர் ஹெர்பர்ட் மொரிசன், மாக்னில் முதலியோரும், ரஷிய ஆக்கிரமிப்புள்ள ஜெர்மன் பிரதேச ரஷ்ய தளபதி சோகலவஸ்கியும் விருந்தில் கலந்துகொண்டனர். பாகிஸதான் ஹைகமிஷனர் ரஹிமதுல்லாவும் பீகம் ரஹிம்துல்லாவும் வந்திருந்தனர்.

இன்று பக்கிங்ஹாம் அரண்மனையில் மன்னர், லண்டனிலுள்ள பர்மா ஹை கமிஷனர் மவுஸஜீக்கும் பீஹார் மாஜி கவர்னர் சர் டௌவுக்கும் பேட்டியளித்தார். (ராய்ட்டர்)

பர்மா பூரண சுதந்திர மசோதா!

பிரபுக்கள் சபையில் நிறைவேறியது

லண்டன், டிச. 4

பர்மாவுக்கு ஜனுவரி 4-ப் தேதிக்கு பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளுக்குட்படாத பூரண சுதந்திரத்தைக் கொடுக்கும் "பர்மா பூரண சுதந்திர மசோதா" இன்று பிரபுக்கள் சபையில் விவாதமின்றி நிறைவேறியது.

காமன்ஸ் சபையில் ஏற்கெனவே இது நிறைவேறி விட்டதால் இப்பொழுது இந்தமசோதா சட்டமாக்கப்படுவதற்கு மன்னரின் அங்கீகாரம் பெற வேண்டும். (ராய்ட்டர்)

இலங்கை சுதந்திர மசோதா

பிரபுக்கள் சபையில் 2ம் முறை

லண்டன், டிச. 4

பிரபுக்கள் சபை அரசாங்க கட்சித் தலைவர் அடிஸன் பிரபு இன்று இலங்கை சுதந்திர மசோதாவை இரண்டாவது தடவையாக சமர்ப்பித்தார். காமன்ஸ் சபையில் இம்மசோதா ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளதாகும்.

வெளிநாட்டு விவகாரத் தொடர்பு ஒப்பந்தங்களில் இலங்கை மற்றும் காமன்வெல்த் நாடுகளைப் பின்பற்றியுள்ளதென்றும் இலங்கை ஹைகமிஷனர் ஒருவரை லண்டனிலும் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் ஒருவரை இலங்கையிலும் நியமிப்பதை குடியேற்றநாட்டு மந்திரி வரவேற்பாரென்றும் அடிசன் பிரபு கூறினார்.

செனட் சபையில் இலங்கை சுதந்திர மசோதா விவாதம்

டாக்டர் நாகநாதன், திரு. பெரிசுந்தரம் எதிர்ப்பு

திரு கார்டினர், திரு சி. குமாரசாமி ஆதரவு

தீர்மானம் நிறைவேறியது

கொழும்பு, டிச 5

செனட் சபைக் கூட்டம் நேற்று தலைவர் ஸர். ஜி. விஜயக்கூன் தலைமையில் நடைபெற்றது. சுதந்திர மசோதா குதூகலத் தீர்மானத்தின் மீது தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. விவாத முடிவில் திருத்த தீர்மானத்தின் மீது வாக்கெடுக்கப்பட்டது. திருத்த தீர்மானத்துக்கு சாதகமாக ஐந்து வாக்குகளும் பாதகமாக 21 வாக்குகளும் கிடைத்தன. திருத்த தீர்மானம் தோல்வியுற்றது. அசல் தீர்மானத்தின் மீது வாக்கெடுக்கப்பட்ட போது சாதகமாக 21 வாக்குகளும் பாதகமாக ஐந்து வாக்குகளும் கிடைத்தன. அசல் தீர்மானம் சபையில் நிறைவேறியது. இதன்பின் செனட் சபை நடவடிக்கை 1948 ஜனுவரி 13-ம் தேதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

செனட் சபைக் கூட்டம் நேற்று தலைவர் ஸர் ஜி. விஜயக்கூன் தலைமையில் நடைபெற்றது. பிரதமர் திரு டி. எஸ் சேனநாயகா, திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா. திரு பீற்றர் கெனமன் ஆகியோர் இக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

சபை நடவடிக்கை 113-வது விதியின்படி சபைக் கமிட்டிக்கு ஸ்ரீமதி மொலமூரே, மிஸ் சிஸி கூரே, திரு ஈ. ஏ. பி. விஜயரத்தின ஆகியோரை நியமிப்பதாக செனட்டர் ஸர் ஒலிவர் கொண்டுவந்த தீர்மானத்தை செனட்டர் ஜான்ஸ் அனுவதித்தார். இது நிறைவேற்றப்பட்டது.

சபை நடவடிக்கை 114-வது விதிப்படி நிரந்தர சபைக் கமிட்டியில் திரு வி. குமாரசுவாமி திரு எஸ். நடேசன் திரு சிரில் டி சொய்ஸா ஆகியோரை நியமிப்பதாக செனட்டர் ஸர் ஒலிவர் குணத்திலகா கொண்டு வந்த தீர்மானத்தை செனட்டர் ஜான்ஸ அனுவதித்தார். இது நிறைவேறியது.

சபை நடவடிக்கை 115-வது விதிப்படி பொதுஜன மனுக் கமிட்டியில் திரு ஏ. பி. இராஜேந்திரா திரு டி. டபிள்யூ. ரி பெரேரா ஆகியவர்களை நியமிப்பதாக செனட்டர் ஸர் ஒலிவர் குணதிலகா கொண்டுவந்ததீர்மானத்தை செனட்டர் கொத்தலாவல அனுவதித்தார். இது நிறைவேறியது.

வீடமைப்பு நகர அபிவிருத்தி சட்டம் 1948 ஜனுவரி 1-ம் தேதி தொடக்கம் குறிப்பிட்ட எல்லைக்குள் அமுலுக்கு வருமென்னும் தீர்மானத்தை செனட்டர் ஸர் ஒலிவர் குணத்திலகா பிரரேபிக்க அதனை செனட்டர் ஜான்ஸ அனுவதித்தார். இது நிறைவேற்றப்பட்டது.

செனட்டர் கார்டினர் பேசுகையில் விஜயன் இலங்கைக்கு வந்ததும் 700 பெண்களை இங்கு கருவித்ததும் இலங்கை குடிஜனம் பெருகியதும்பற்றி குறிப்பிட்டுவிட்டு தேசத்தின் ஆட்சியை ஒழுங்காக நடத்திச் செல்வதில் கமியூனிஸ்டுகளால் அனுவசியமான இடர்கள் விளைக்கப்படுவதாகவும் ஐக்கியமாக எல்லோரும் சேர்ந்து தேச முன்னேற்றத்துக்குப் பாடுபட வேண்டுமென்றும் கூறினர்.

செனட்டர் கர்னல் ரைட் பேசுகையில் செனட் சபை அரசாங்க கட்சித் தலைவர் பேசிய விஷயங்கள் பல தமக்கு அதிருப்தியைத் தந்த போதிலும் இலங்கை சுதந்திரமடைவதில் தமக்கு சந்தோஷமென்று கூறி மற்றும் அங்கத்தினரும் தேச நன்மைக்கான வழியில் நடப்பார்கள் என நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

செனட்டர் பெரிசுந்தரம்

செனட்டர் பெரிசுந்தரம் பேசுகையில் அரசாங்க கட்சித் தலைவரைப் பாராட்டிவிட்டு, சுதந்திர மசோதாவைவிட்டு கொண்டுவந்த குதூகலிக்கும் தீர்மானத்தைத் தாம் ஆதரிக்க முடியாதென்று கூறினர்.

ஸ்ரீமதி மொலமூரே பேசுகையில் பிரதமரைப் பாராட்டிக் கூறினர்.

செனட்டர் மாக்கான்மரைக்கார் பேசுகையில் இலங்கை மக்கள் இன்று முன்னேறி சுதந்திரம் அடைந்துவிட்டார்கள் என்றும் சுதந்திர மசோதாவில் எதுவிதமான பிழைகளும் இல்லையென்றும் கூறினர்.

சேனீர் இடைவேளைக்குப் பின் செனட்டர் மாக்கான் மரைக்கார் தொடர்ந்து பேசுகையில் போர்த்துக்கேஸியர் இலங்கை வந்தபோது சிங்களவர்களுடன் முஸ்லிம்கள் தோளோடு தோள நின்று யுத்தம் புரிந்ததாகவும் இந்த சுதந்திர மசோதாவில் கூறியபடி பிரிட்டன் நடக்குமென்று தாம் நம்புவதாகவும் கூறினர்.

செனட்டர் எல். பி. ஜெயசேன பேசுகையில், கிடைக்கும் சுதந்திரத்தைப்பற்றி தமக்கு சந்தேகமாக இருப்பதால் தாம் இந்த தீர்மானத்தை ஆதரிக்க முடியாதென்று அவர் கூறினர்.

செனட்டர் ஸர் ஜோன் டார்பர்ட் பேசுகையில் ஐரோப்பியர்கள் இலங்கையில் புரிந்து வந்த சேவையைத் தொடர்ந்து செய்வர் என்று கூறினர்.

செனட்டர் நாகநாதன்

செனட்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில் கிடைக்கப்போகும் சுதந்திரத்தைப்பற்றிய உண்மை தெரியாதென்றும் இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லையென்றும் தாம் இந்த தீர்மானத்

(4-ம் பக்கம் பார்க்க)

தனிப் பாதையைத் தழுவி சர்வதேச மதிப்பைப் பெறுவோம்!

இந்தியாவின் அந்நியநாட்டுக் கொள்கையை பண்டித நேரு விளக்குகிறார்

வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியில் இந்தியா எக்கட்சியிலும் சேராது

புதுடில்லி, டிச 4

இன்று இந்தியா பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாட்டு விவகார இலாகாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மான்யத்தைக் குறைக்க வேண்டுமென்று தீர்மானத்தின் மீது சபையில் இந்தியாவின் வெளிநாட்டு விவகாரங்கள்பற்றி விவாதம் நடைபெற்றது. அப்பொழுது பண்டித நேரு பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்.-

"உலக வல்லரசுகளின் போட்டிக்கோஷ்டிகளில் இந்தியா எந்தக் கோஷ்டியையும் சேராமல் விலகியே இருக்கும். நாம் அமெரிக்காவுக்கு நண்பர்களாக இருப்போம். நாம் அமெரிக்காவுடன் ஒத்துழைக்கவே விரும்புகிறோம். நாம் சோவியத் ரஷியாவுடனும பூரணமாக ஒத்துழைக்க விரும்புகிறோம். அதன் பயனாக நாம் நமது வெளிநாட்டுக் கொள்கையில் ஓரளவுக்குத் தன்னந்தனியாகவே செல்லவேண்டியதாக நேரிடும். இவ்வித நிலையை நாம் அனுஷ்டிப்பதால் இறுதியில் நமக்கு தேசிய மதிப்பும் சர்வதேச மதிப்பும் ஏற்படும். யுத்தத்தில் உதவிசெய்ய இந்தியாவால் முடிந்தபோதிலும் உலக யுத்தத்தில் இந்தியா கலந்து கொள்ளாது. ஆனால், அப்படி யுத்தத்தில் ஈடுபடும்படியான நிலைமை ஏற்பட்டால், நம் நலனுக்கு அனுகூலமாக இருக்கும் கட்சியுடனேயே நாம் சேருவோம்"

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
196 ஏ, நட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 8411.

சர்வஜித்து௵ கார்த்திகை மீ 21௳
சனிக்கிழமை

உடனே நிறுத்த வேண்டும்!

கொழும்பு துறைமுகத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆங்கு லஞ்சமும் நிர்வாக ஊழல்களும் நடைபெறுவதாகப் புகார்கள் சொல்லி வந்திருக்கிறார்கள். குறிப்பாக துறைமுக எஞ்சினியர் இலாகா மீதும் மாஸடர் அட்டென்டன் இலாகா மீதும்தான் சொல்லப்பட்டன. இவ்விஷயம் இன்று நேற்று நடந்து வருவனவல்லவாம்! சென்ற மூன்றரை ஆண்டுகளாக நடைபெறுகின்றன. துறைமுகப்பகுதி "போட்மன்" சங்கத் தலைவர் திரு. தம்பிராஜா இதை "சுதந்திரன்" நிருபருக்கு இன்று தெரிவித்துள்ளார். அவரது நன் முயற்சியால் பழைய அரசாங்க சபை அங்கத்தவர்களும் சமூகத் தலைவர்களும் இந்த ஊழல்களை எடுத்துவிட முன்புமுயன்றனர். சென்ற வருடத்தில் இத்தொழிலாளர்கள்நிலைமையை ஆராய்வதற்கும் சிபார்சுகள் செய்வதற்கும் ஆகஸ்ட் மாதத்தில் பதில் தொழில் கமிஷனர் திரு. சி. ஈ. பி. ஜெயசூரியா அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார். அவரது அறிக்கை இலங்கையின் பிரதம காரியதரிசிக்கு இவ்வருடம் பிப்ரவரி மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆயின் இன்று வரைக்கும் அவ்வறிக்கை இன்னதுதான் என்பது பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. இலங்கை மந்திரிகள் இந்நாட்டிலிருந்து லஞ்ச ஊழல்களை அகற்றுவதற்கு கங்கணங்கட்டியிருப்பதாகக் கூறுகிறார்கள் உண்மையில் அவர்கள் அப்படிசெய்யும் எண்ணமிருந்தால் இவ்வறிக்கையை வெளியிட்டு தக்கநடவடிக்கை எடுக்கவேண்டியது முதற்கடமை. இதை செய்வதற்கு ஏன் தயங்குகின்றார்கள்.

துறைமுகத்தில் நிலைமை மோசமாக இருக்கின்றது. இதை ஒருவரல்ல, பல கட்சிப் பெரியார்களும் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது அரசாங்க சேவைக் கமிஷனர்களில் ஒருவராக இருக்கும் ஸர் ரத்ன ஜோதி சரவணமுத்து அவர்கள் கூட "இந்த இலாகாவில் நடக்கும் ஏராளமான பிழைகளை எனக்குத் தெரியும்" என்பதாக ஒரு முறை கூறியுள்ளார். இதற்கு மேலும் வேறு அத்தாட்சி வேண்டுமா?

போட் கமிஷன் இலாகாவில் சிறு வேலைகளில் சேருபவர்கள் கட்டணப் பணம் கட்ட வேண்டியிருக்கிறதாம். இப்பணம் அவர்கள் வேலைகளை விட்டு வெளியேறும் போது திருப்பிக் கொடுக்கப்படும் என்று சாட்டுக் கூறியே வாங்கப்படுகின்றதாம். சில தொழிலாளர்களின் மாதவேதனத்திலும், மேற்பார்வையாளருக்கு ஒரு பகுதி மாதாமாதம் கொடுக்கவேண்டியிருக்கின்றதாம். அவர்கள் கொடுக்கத்தவறினால், வேறு காரணங்களைக் காட்டி வேலையினின்றும் நீக்கப்படுகின்றனராம். தொழிலாளர்கள் நலனையிட்டு துறைமுகத்தில் "போட் தொழில் உத்தியோகஸ்தர்" என்று ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் தான். ஆயின் தொழிலாளர் நிலைமை திருந்தியதாகக் காணப்படவில்லை.

துறைமுக நிர்வாகம் போக்குவரத்து மந்திரி கேர்னல் கொத்தலாவல அவர்களின் கீழ் உள்ளது. மந்திரியார் அவர்கள் இன்னும் காலந்தாழ்த்தல் கூடாது. இப்புகார்கள் பல காலமாகச் சொல்லப்பட்டு வருகின்றது. இன்னும் நீடிக்க வைத்தால்முறையாகாது. உண்மையாயின் உடனே முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும் தொழிலாளரை இம்சிப்பதை எந்த அரசாங்கமும் பார்த்திருக்கக் கூடாது.

இந்தியாவில் அணுசக்தி உற்பத்தி

நாசவேலைக்கு உபயோகப் படமாட்டாது.

புதுடில்லி, டிச. 5

இந்தியாவில் அணுசக்தி ஆராய்ச்சி வேலைகள் மிக மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. அணுசக்தியை ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞான ஆராய்ச்சிஸ்தாபனங்களுக்கு இந்திய சர்க்கார் ஏராளமான பணஉதவிசெய்து வருகிறார்கள். பம்பாயிலுள்ள டாட்டா விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்திற்கும் கல்கத்தாவிலுள்ள ஸஹா விஞ்ஞான ஆராய்ச்சி நிலயத்திற்கும், போஸ் விஞ்ஞான ஆராய்ச்சி ஸ்தாபனத்திற்கும் இந்திய சர்க்கார் ஏராளமான பணஉதவிசெய்து வருகிறார்கள். இன்னும் அணுகுண்டு ஆராய்ச்சி சம்பந்தமாக இந்தியாவுககு போதிய தகவல்கள் தெரிவிக்க இந்திய சர்க்காரின் வேண்டுகோளின்படிகானடா சர்க்காரும் அமெரிக்க சர்க்காரும்இணங்கியிருக்கின்றனர். இந்திய சர்க்கார் தங்கள் கைத்தொழிலுக்கு அணுகுண்டு சக்தியைஉபயோகிக்கவேவிரும்புகிறார்கள். இது சம்பந்தமாக ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காடுகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்து போதிய தகவல் சேகரித்துவரும்படி இந்தியாவின் இரு பிரபல விஞ்ஞானிகளான டாக்டர் பாபாவையும் டாக்டர் மேகநாத் ஸஹாவையும் இந்திய சர்க்கார் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

எடின்பரோ பிரபுவின் தாம்பத்திய வாழ்க்கை முடிவு

டிசம்பர் 15-ல் கடற்படைக் கடமைக்குத் திரும்புவார்

லண்டன், டிச. 4

அரசருடைய ஸ்காட்லாந்து தேசத்திலுள்ள தோட்டத்தில் எலிஸபெத் இளவசியுடன் புதுமண வாழ்க்கையைக் கழிக்கும் எடின்பரோ பிரபு இந்த மாதம் 15-ந் தேதி பிரித்தானிய கடற்படையில் வேலை யேற்கும்படி அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

சென்ற யுத்த காலத்தில் பிரபு பிரித்தானிய கடற்படையில் "காப்டன்" ஆக இருந்தார் இனி அப்படையின் நிர்வாக அதிபரோடு கடமையாற்றுவார். [ராய்ட்டர்]

அதிக அரிசி கிடைக்க ஏற்பாடு

கொழும்பு, டிச. 5

சர்வதேச அவசிய உணவுச் சபையினரால் 1948ம் வருடத்திற்கு விதிக்கப்பட்ட 185 ஆயிரம் டன் அரிசியைத் தவிர வேறும் 32,000 டன் அரிசியை இலங்கை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன.

இவற்றில் 20,000 டன் அரிசி பிரேஸிலில் இருந்தும் 12,000 டன் எகிப்தில் இருந்தும் வரும் எனத் தெரிகிறது.

பாம் கார்டன் தோட்ட வேலை நிறுத்தம் தொடர்கிறது

மூவருக்குச் சிறைத் தண்டனை

ரத்னபுரி, டிச. 5

பாம் கார்டன் தோட்டத் தொழிலாளர்களான கிருஷ்ணன், மூக்கையா, கந்தன் என்பவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டு விட்டது. இவர்களில் முதல் இருவருக்கும் 3 மாத சிறைத் தண்டனையும் மூன்றுமவருக்கு 6 வார சிறைத்தண்டனையும் அளிக்கப்பட்டிருக்கிறது. மூவரும் இப்போது தலைக்குஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இங்கு நடந்து வரும் தொழிலாளர் வேலை நிறுத்தம் சளையாது தொடர்ந்து வருகிறது. (ந - நி)

புதுடில்லி, டிச. 4

பர்மிய பிரதமர் தக்கின் நு வுக்கும், அயல்நாட்டு மந்திரி ஊடின் டுட்டுக்கும் இன்று இந்திய பிரதமமந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு அளித்த விருந்தில் கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டனும், ஸ்ரீமதி மவுண்ட்பேட்டனும், ராஜதந்திரிகளும் இதர உயர்தர அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சர்க்கார் வரவு செலவு திட்டம் 1947-48

ஒரு குறிப்புரை

“காண்டீபன்”

இலங்கை அரசாங்கம் வரவு செலவுத் திட்டங்கள் வகுப்பதற்கும் புதக் கணக்குப் போடுவதற்கும் அக்டோபர் மாதம் முதலாம் தேதி தொடக்கம் செப்டம்பர் மாதம் முடியவுள்ள பன்னிரெண்டு மாதங்களையும் ஒரு வருடமாகக் கொள்ளும். ஆகவே 1947-ம் ஆண்டு அக்டோபர் தொடக்கம் 1948-ம் வருடம் செப்டம்பர் முடியவுள்ள ஒரு வருஷ வரவு செலவுத் திட்டம் சென்ற திங்கட்கிழமை பாராளுமன்றத்தின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. சாதாரணமாக குறித்த கணக்கு வருடம் தொடங்க முன்னமே வரவு செலவுத் திட்டங்கள் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட வேண்டும். இவ்வருடம் சோல்பரி அரசியல் திட்டம் சமீபமாக அமுலுக்கு கொண்டு வரப்பட்ட காரணத்தையிட்டு வரவு செலவுத் திட்டம் அனுமதிக்கும் மசோதா பின் போடப்பட்டது.

ஒரு அரசாங்கம்சமர்ப்பிக்கும் வரவுசெலவுதிட்டம்அந்தஅரசாங்கத்தைக்கொண்டுநடத்தும் மந்திரிமாரின் கொள்கைகளையும் அவர்களின் செயல் திறமையையும் அவர்கள் பொது மக்களிடையே பிரசாரம் செய்த பிரகடனங்களை நடை முறையில் அனுசரிப்பதையும் பொதுவாக அவர்களுடைய நோக்கங்களையும் பரிசோதனை செய்வதற்கு ஏற்ற சான்றும் சாதனமுமாகும். ஆகவே பொது மக்கள் சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் யூ. என். பி. மந்திரிமார் ஒருமித்துப் பொறுப்பெடுத்து நடாத்தும் அரசியல் போக்கை கண்காணிப்பதற்கு இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டம் உதவியாக இருக்கும்.

குறித்த வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது நிதி மந்திரியார் திரு. ஜெயவர்தன அவர்கள் கூறிய ஒரு வார்த்தையை யாரும் மறக்க முடியாது. அவ்வார்த்தையின் சாராம்சம்பின்வருமாறு:- "இலங்கை அரசாங்கத்தின் வரவு செலவு இலங்கையைப் போல் 5 அல்லது 6 மடங்கு பெரிய இந்திய இராஜதானிகளின் வரவு செலவுத் தொகையளவில் பெரிதாய் இருக்கிறது" என்பதே! இந்த நிலைமை எங்களுடைய நிதி மந்திரியாருக்கு வியப்பையும் மட்டற்ற மகிழ்ச்சியையும் கொடுத்ததாகத் தெரிகிறது. பூச்சிக் குணம் என்ற நோய் பிடித்த குழந்தை பருத்திருப்பதைக் கண்ட தாய் தன் பிள்ளை கொழுத்து வளர்ந்திருக்கிறது என்று எண்ணி மனம் பூரித்தாளாம்! அதே மாதிரித்தான் எங்கள் மந்திரியார் ஜெயவர்தன இறும்பூதெய்தும் பான்மையும் இருக்கிறது.

ஒரு நாட்டுச் செல்வ வளம் அந்நாட்டிலே புழங்கும் பண நோட்டின் தொகையிலே தங்கியிருக்கவில்லை. வருஷா வருஷம் அந்நாட்டிலே உற்பத்தியாகும் பொருள்களின் தொகையிலும் பிற நாடுகளிலே இருந்து தாங்கள் ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்குப் பதிலாகவோ அல்லது வேறு எச்சேவைக்கும் பதிலாகவோ இறக்குமதி செய்யும் பொருள்களின் தொகையையுமே பொறுத்திருக்கும். அரசாங்கம் ஒன்றிற்கு இரண்டாக அல்லது இன்னும் அதிகப்படியாகக் காகித நோட்டுகளை வர்ணம் வர்ணமாக அச்சடித்து விட்டால் அந்நாட்டிலே செல்வம் கூடப்போவதில்லை. தற்போது அநேக நாடுகளில் இருக்கும் நிலைமை இத்தகையது தான். யுத்த கால காரணங்களினால் பிரதானமாக இந்நாட்டிலே அச்சடித்து விடப்பட்ட பண நோட்டுகள் மிகப் பெருகி விட்டன. ஆகவே பெரும்பாலானவர்களினுடைய வருவாய் ரூபாய் கணக்கில் மிகவும் அதிகரித்திருக்கிறது. ஆனால் உண்மையான பொருள் செல்வத்தில் நாட்டு நிலைமை மிகவும் குறைபாடுடையதாயிருக்கிறது. யுத்த காலத்திற்கு முன்னர் சராசரியாக ஒரு குடும்பம் உண்ட உணவோ உடுத்த புடவையோ மற்றும் அநுபவித்த செல்வங்களின் ஒரு சிறிது பங்கையே தற்போதும் அனுபவிக்கிறது. இடையிடையே சிற்சிலர் மற்றவர்களிலும் பார்க்க அதிகம் பணக்காரராகி செல்வம் அனுபவிக்கிறார்கள். ஆனால் தேச முழுமையும் கணக்கிடின் நிலைமை மிகவும் சீர்கேடாகவே இருக்கிறது. இந்த பொருட் பஞ்சமும் பணப் பெருக்கமும் என்ற வியாதியைத் தீர்ப்பதற்கு ஏற்ற மாதிரியான பரிகாரத்தையே மிக்க சிரமமாக ஒவ்வொரு நாட்டு நிதி மந்திரியும் கவனிப்பார்கள். அதற்கு ஏற்றவாறே அரசாங்க வரவு செலவு திட்டத்தை வகுப்பது. அரசாங்க வரவு [illegible] உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளமகொடுப்பதற்கும் பலஇலாக்காக்களை கொண்டு நடத்துவதற்கும் மந்திரிமார்கள் தங்கள் தங்கள் தொகுதிகளில் செய்ய வேண்டிய பொது வேலைகட்கும் தேவையான பணத்தை சேகரிப்பதும் விநியோகிப்பதுமான முறையன்று. அவ்வாறுதான் தங்கள் கடமை என்று 1930-ம் வருடத்திற்கு முன் அரசாங்கங்களும் பொருளாதார சாஸ்திர நிபுணர்களும் கணித்திருந்தனர். ஆயின் 1930-ம் ஆண்டு தொடக்கம் பல தேசங்களையும் பீடித்திருந்த வேலையில்லாத் திண்டாட்டமும் வியாபாரப் பலிதக் குறைவும், பணமின்மையும் அக்கருத்துகளை நொருக்கிவிட்டன.

தற்போது ஒரு நாட்டின் பொருளாதாரத் துறையில் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், பொருளில்லாது பணம் மிதமிஞ்சியிருக்கும் பணப் பெருக்கம் அல்லது விக்கிரயத்திற்கு வரும் பொருள்களை வாங்குவதற்கு போதிய பணமில்லா மிடியாகிய நோய்களை அரசியல் திட்டங்களினுலும் செய்கைகளாலும் பெருமபான்மை சீர்செய்யலாமென்று வெளிப்படுகிறது. அந்தமாதிரியே மந்திரிகள் அரசாங்க வரவு செலவுத் திட்டங்களையும் வரி வசூலிக்கும் வகைகளையும் கையாளுவர். புது வருடத்திலே நியமிக்கும் புது வரிகளும் அரசிறை மாற்றங்களும் செலவுத் திட்டங்களும் மேற்காட்டிய நோக்கத்தையே மேற்கொண்டு விதிக்கப்படும். ஆயின் இந்த முன்மாதிரியும் புதுக் கருத்துகளும் சீரிய முறைகளும் இலங்கையரசாங்க மந்திரிகட்கு உட்புகுவதில்லை. ஒருவேளை புகுந்தாலும் நடைமுறையில் அனுசரிக்கப்படுவதில்லை.

இந்தக் கட்டுரையில் பணப் பெருக்கம் என்ற வியாதியான நிலைமையைத் தீர்ப்பதற்கு வழிவகைகளை மந்திரிமார் கைக்கொள்ளாததையும் உண்மையில் அந்த வியாதியைப் பெருப்பிக்கும் வகையான செய்கைகளையும் ஒருவாறு எடுத்துக் காட்டுவோம்.

மந்திரியாரவர்கள் தன்னுடைய பேச்சில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார். இலங்கை யரசிறையில் 79 சத விகிதம் மறைமுகமாக வசூலிக்கப்படும் வரியிலிருந்தும் 21 சத விகிதம் நேரடியாக வசூலிக்கப்படும் வரியிலிருந்தும் வருகின்றது. மறைமுகமாக வசூலிக்கப்படும் வரிகளுள் இறக்குமதியாகும் பொருள்களில் விதிக்கப்படும் தீர்வையே பிரதானம். இதைச் சுங்க வரியென்றும் சொல்வார்கள். நேரடியாக வசூலிக்கப்படும் வரியென்பது பிரதானமாக அதிக வருவாயைப் பெறும் தனவந்தர்கள், வியாபாரிமார் முதலானோரிடம் பெறும் வருமான வரியே! மறைமுகமாக வசூலிக்கப்படும் சுங்க வரி அந்நாட்டிலே பொருள்களின் விலைவாசியை யேற்றிவிடும். இறக்குமதியாகும் பொருள்களின் தொகையைக் குறைக்கும். விக்கிரயத்திற்கிருக்கிற பொருள்களின் அளவிற்கு அதிகப்படியாகப் பணம் இருப்பதே பணப் பெருக்கம் என்ற நோய்! இந்த நோயைத் தீர்ப்பதற்கு இரண்டு பரிகாரம் சாதாரணமாக எல்லா அரசாங்கமும் கையாளும். ஒன்று அதிகம் பணம் கிடைத்த "புதுப் பணக்காரரிடம்" இருந்து அந்தப் பணத்தை நேரடி வரியாக அப்பிவிடுவது. இந்தப் "புதுப் பணக்காரர்" யார் என்று எல்லாருக்கும் தெரியும். மற்றப் பரிகாரம் நாட்டின் பொருள் தொகையைப் பெருக்குவதே. இறக்குமதியைத் தேவையான வகைகளில் கூட்டியும் உள் நாட்டுப் [illegible] படுத்தியும் பொருள் தொகையைப் பெருக்குவதும் சகஜம்.

இலங்கையிலே டொனமூர் அரசியல் வந்த நாள் தொடக்கம் வருடா வருடம் செலவு கூடுவதும் வருவாய் குறைவதும் வழக்கமாகிவிட்டது. இதைச் சமாளிப்பதற்கு சாஸ்திரோக்தமான முறைகளைக் கையாளாது சுலபமான வழியான சுங்க வரியை ஏற்றுவதென்றதையே கையாண்டு வந்தார்கள். அதன் பிரகாரம் இலங்கையில் விதிக்கப்படும் சுங்க வரி மிகக் கூடுதலானது. அதன் பெறு பேறு பொருள்களின் விலைவாசி யேறுவதே. பல வருஷங்களாக இந்தத் துர்ப்புத்தியைப் பயின்று வந்தனர். யுத்த காலத்திலே அநேகம் பொருட்களின் தீர்வையை முதல் தற்காலிகமாக ஏற்றினர். பின்னர் அந்தத் தற்காலிக ஏற்றத்தை நிரந்தரமாக்கினர். பின்னர் இப்போது பல பொருள்களில் இன்னும் கூடுதலாக விதிக்கின்றார்கள். இலங்கையரசாங்கம் சுங்க வரியைக் குறைத்து நேரடியான வருமான வரியை யேற்ற வேண்டியது மிக்க அவசியம்.

ஒரு நாட்டின் சுங்க வரியை விதிக்கும்போது சில கொள்கைகளை முன்னிட்டு விதிப்பார்கள். உள்நாட்டிலே அப்பொருட்கள் அல்லது அதற்குப் பதிலாக உபயோகிக்கப்படும். பொருள்கள் உற்பத்தி செய்யப்படின் அந்த உள்ளூர் பொருள் உற்பத்தியைப் பாதுகாக்கும் பொருட்டு அதற்கேற்ற தீர்வையை தேவையான இறக்குமதிப் பொருள்களில் வசூலிப்பார்கள். அல்லாவிடின் தீய பழக்க வழக்கங்களைக் கொண்டுவரக் கூடிய பொருள்களில் விதிப்பார்கள். அம்மாதிரியான சுங்க வரி தகுதியானது. ஆனால் வெறுமனே அரசிறையைப் பெருக்கும் நோக்கமாக விதிக்கும் சுங்கவரி தேசத்தின் செல்வத்திற்குத் தகாதது. இவ்வாறு பல **வருஷங்களாகப் படிப்படியாகச் சுங்க வரியை ஏற்றியிருப்பதே இலங்கையிலும் பார்க்க மற்ற நாடுகளில் பொருள்கள் விலை மிக மலிவாயிருப்பதற்கும் மாதா மாதம் ஆயிரக்கணக்கான இலங்கை மக்கள் சாமான் வாங்கும் நோக்கமாக இந்தியாவுக்கு"ஓய்வு"க்கும்"தீர்த்த யாத்திரைக்"கும் போவதும் வாங்கிய சாமான்களை அழுகுப் புரட்டி சுங்க இலாக்கா உத்தியோகஸ்தர்களை ஏமாற்றுவதும் அன்றேல் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்து கொண்டுசேர்ப்பதும் ஆகிய சீர்கேடான நிலைமைக்குக் காரணம்.** சென்ற 1943 ம் 1944 ம் ஆண்டுகளில் விதித்த யுத்தகால ஏற்றம் என்ற வரிகளை ரத்துச் செய்து நாட்டிலே உபயோகப் பொருள்களைப் பெருக்கி விலைவாசியைக் குறைக்க வேண்டியதற்குப் பதிலாக பல பொருள்களில் மேலும் வரி விதித்து இலங்கையை நிரந்தரமாகப் பணப் பெருக்கம் என்ற நோய் பீடிக்கச் செய்கிறார்கள்.

மேலும் ஒரு பொருளில் 12 சதம் சுங்க வரி விதித்தால் வியாபாரி அப்பொருளின் விலையை 12 சதத்தால் அல்ல 15 சதத்தால் ஏற்றுவான். ஈற்றில் சுங்க வரியை இறுப்பது அப்பொருள்களை உபயோகிக்கும் சாதாரண மக்களே! அவர்கள் அவ்வரியை மாத்திரமல்ல வரியிலும் பார்க்கக்கூடுதலான தொகையே இலங்கையில் அதிகப்படியாக விதிக்கப்படும். சுங்கவரி பொருள்களின் விலைவாசியை ஏற்றுவது என்னும்நட்டத்தோடு முடியவில்லை, ஏறுபடி விலைவாசி தொழிலாளிகளையே முதல் தாக்கும்! அதன் பிரகாரமே இலங்கையில் பல பாகங்களில் தொழில் நிறுத்தம் முதலாய சச்சரவுகள் அதிகப்படுவதற்குக் காரணம். பொருள்களின் விலை யேறுவதால் உள்நாட்டிலே செய்யப்படும் பொருள்களும் விலையில் ஏறும். ஆகவே இலங்கையிலே செய்யப்பட்டுப் பிற ஊர்களுக்குப் போகும் ஏற்றுமதிகளின் பொருள்கள் விலையில் அதிகப்படியாக இருக்கும். ஆகவே அவர்கள் வேறு இடங்களிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களுடன் போட்டியிடமாட்டா. நம் நாட்டு ஏற்றுமதிக்கு உலை வைப்பதாய் இருக்கும் யுத்தகாலத்திய காரணத்தையிட்டு நம் நாட்டு ரப்பர், தேயிலை, கொப்பரா எண்ணெய் முதலாய பொருட்கள் பிற ஊர் மார்க்கெட்டில் மிகவும் இலகுவாக விற்க வசதியாயிருந்தது. ஆனால் இந்நிலைமை மிக்க சீக்கிரமாக மாறுகின்றது. ஆகவே இந்நாட்டிலே பொருள்களின் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் மிக்க சிரத்தையுடன் வேலை செய்யவேண்டும்! அதற்குப்பதி

(3-ம் பக்கம் பார்க்)

அம்பலாங்கொடை போலிஸ் பகுதியில் கொலை

எதிரிகள் யாரென்று தெரியவில்லை

கொழும்பு, டிச. 6

அம்பலாங்கொடையைச் சேர்ந்த போறகந்த என்னுமிடத்தில் எச். சிதாரிஸ என்பவர் வீட்டுக்கொல்லையில் 30-11-47 அன்றிரவு மாடுகள் கட்டப்பட்டிருந்த இடத்துக்கருகில் மூவர் காணப்பட்டனர். சிதாரிஸ் பொல்லுடன் கலைத்து ஒருவரைத் தாக்க, வந்த மூவரும் திரும்பி வாளாலும் ஈட்டியாலும் அவரைத் தாக்கிப் படுகாயம் விளைவித்தனர். காயப்பட்ட சிதாரிஸ் எல்பிட்டிய ஆஸபத்திரிக்கு அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானார், மரண விசாரணையின்போது எதிரிகள் யாரையும் சுட்டிச் சாட்சி கூறுவாரில்லை.

நிஜாம் உயிர்தப்பினார்

மோட்டார்கார் மீது வெடிகுண்டெறியப்பட்டது

ஹைதராபாத், டிச. 4

ஹைதராபாத் வீதிவழியாக நிஜாம் மோட்டாரில் சென்றுக்கொண்டிருக்கும் மோட்டார் மீது எறியப்பட்ட வெடிகுண்டு காரில் பட்டு ரஸ்தாவில் சிறிது தூரம் உருண்டோடி வெடித்தது. நிஜாம் மன்னர் உயிர்தப்பினார். வழிப்போக்கர் ஐவர் காயமடைந்தனர். வெடிகுண்டு உள்ளூரில் செய்யப்பட்டதாக இருந்தது. வழிப்போக்கர்கள் வெடிகுண்டு எறிந்த நபரைப் பிடித்துக்கொண்டனர். நிஜாமின் உத்தரவின் பேரில் அவன் போலீசார் வசம் ஒப்புவிக்கப் பட்டார். அவன் பெயர் நாராயணபாபு. ஹைதராபாத் வாசியல்ல.

ஐரோப்பியர் கட்டிடங்களை அராபியர் தாக்கினர்

அராபியர் ஆர்ப்பாட்டத்தில் பாகிஸதான் முஸலிம்களும் கலந்து கொண்டனர்

பாதுகாப்புக்கு 80,000 பேர் கொண்ட யூத ராணுவம் தயார்

ஜெருசலேம், டிச 4

பாலஸ்தீன அராபியர்கள் பாலஸதீன யூதர்களைத் தாக்காது பாதுகாக்க தயாராக இருக்கும்படி 80 ஆயிரம் பேர்கொண்ட யூதர் படைக்கு ஹாகனாத் ஸ்தாபனம் உத்தரவிட்டிருக்கிறது.

ஜெருசலேத்தில் யூதர்களை அராபியர் தாக்காது பாதுகாக்க ஹாகனாத் இன்று ஒரு திட்டத்தை அமுல் செய்தது. நகரை 10 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொருபகுதிக்கும் ஒருஹாகனாத் ராணுவ அதிகாரியை நியமித்திருக்கிறது. 'அவர்கள் தலைமையிலுள்ள படைகள் அபாயம் ஏற்படும் இடங்களுக்கு விரைந்து சென்று நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

3 நாள் 'யுத்தம்'

பாலஸதீன யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் நடைபெற்ற மூன்று நாள் யுத்தத்தில் 20 யூதர்களும் 15 அராபியர்களும் மாண்டனர். யூதநகரான டெல் அவிவுக்கும் அராபிய நகரான ஜாபாவுக்குமிடையே இன்று மீண்டும் சண்டை நிகழ்ந்தது. நான்கு லொறிகளைத் தாக்கிய அராபியர்கள்மீது யூதக்காவலாளிகள் சுட்டதால் 4 அராபியர்கள்காயமடைந்தனர்.

ஜெருசலேமில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் துருப்புகள் பாதுகாவல் செய்து வருகின்றன. இரு பிரிட்டிஷ் சோல்ஜர்கள் அராபியர்களால் தாக்கப்பட்டு காயமடைந்தனர்.

அராபிய நாடுகளில்

லண்டன். டிச. 4

கெய்ரோவிலும் அலெக்சான்டிரியாவிலும் பாக்தாத்திலும் பாலஸதீன விரிவினையை எதிர்த்துஅராபியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இது ஐந்தாம் நாள்ஆர்ப்பாட்டங்களாகும்.அங்குள்ள ஐரோப்பியர் கட்டிடங்களைத் தாக்கினர்.

ஆர்ப்பாட்டங்கள் தடை செய்யப்படுமென்று எகிப்திய சர்க்கார் அறிக்கை பிறப்பித்திருக்கின்றனர்.

போலிஸ் பாதுகாவல் செய்து கொண்டிருந்த பிரிட்டிஷ் ஸ்தாபனிகக் கட்டிடத்தை அலெக்ஸாண்டிரியா நகரில் ஆர்ப்பாட்டம் நடத்திய 5000 ஜனங்கள் இரும்புத் தடிகளுடன் படையெடுத்துத் தாக்கினர். போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர். அதனால் நால்வர் காயமடைந்தனர்.

அராபிய லீக் நாளை நடத்தவிருந்த ஆர்ப்பாட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

பாக்தாத்தில் ஜனங்கள் கிளர்ச்சி செய்யாதிருக்கும்படி ஈராக் உள்நாட்டு மந்திரி வேண்டுகோள் விடுத்தார்.

கெய்ரோ நகரில் அமெரிக்க சர்வகலாசாலையை அராபிய மாணவர்கள் தாக்க முயன்றனர். போலிசார் அவர்கள் தலைக்கு மேலாக ஆகாயத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர்.

7000 மாணவர் கூட்டத்தில் அராபிய லீக் காரியதரிசி பேசியபோது, "பலாத்காரத்தைப் பலாத்காரத்தால் சமாளிக்க எங்குமுள்ள அராபியர்களும் முஸலீம்களும் தயாராக இருக்கிறார்கள். யூதர் ஆதிக்கத்திற்குட்படுவதைவிட இறந்துபடுவோம்" என்று தெரிவித்தார்.

கெய்ரோவில் நடைபெற்ற கலகத்தில் இன்று பல மாணவர்கள் காயமடைந்தனர். ஐக்கிய தேச ஸ்தாபனத்திலிருந்து எகிப்து விலகவேண்டுமென்று, எகிப்திய மன்னருக்கு மாணவர்கள் ஒரு மனுவை சமர்ப்பித்தார்கள்.

ஈராக்கிலுள்ள பாகிஸ்தான் முஸலிம் சங்கத்தார், பாலஸ்தீனத்தைக் காக்க அராபியர் செய்யும் போராட்டத்தில் கலந்துகொள்ள தங்களுக்கு அனுமதி கொடுக்கும்படி கேட்டு ஜனாப் ஜின்னாவுக்கு நேற்றிரவு தந்தி யனுப்பியிருக்கிறார்கள். ஈராக்கிலுள்ள பாகிஸதான் முஸலிம்கள், அராபியர் நடத்திய மூன்று நாள் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர். அவர்கள் நிதி திரட்டியும் வருகிறார்கள்.

மே மாதம் ஐக்கிய தேச நிர்வாகம்

லண்டன், டிச. 4

பாலஸ்தீன நிர்வாகத்தை மே மாதத்திலேயே ஐக்கிய தேச ஸதாபனத்திடம் ஒப்புவித்துவிட்டு பிரிட்டிஷார் வெளியேறிவிடுவார்கள். (ராய்ட்டர்)

துறைமுகத் தொழிலாளர் துயரம்

லஞ்ச ஊழல்களை ஒழிக்க அரசாங்கம் முன்வரவேண்டும்

'போட்மன்கள்' சங்கத்தலைவர் கூறும் விவரம்

('சுதந்திரன்' நிருபர்)

கொழும்பு துறைமுகத்தில் வேலைசெய்யும் "போட்மன்கள்" சென்ற சில வருடங்களாகப் பலத்த கஷ்டங்களுக்கு ஆட்பட்டிருந்தும் அரசாங்கம் அதையிட்டு பராமுகமாக இருக்கின்றது என்று இன்று காலையில் கொழும்பு துறைமுக "போட்மன்" சங்கத்தலைவராகிய திரு. ஏ. பீ. தம்பிராஜா "சுதந்திரன்" நிருபரிடம் தெரிவித்தார்.

ஏ. பீ. தம்பிராஜா

திரு தம்பிராஜா எமக்குச் சொல்லியதாவது:-

"1942ம் வருடத்தில் துறைமுகக் கொமிஷன் அதிகாரியின் கீழ் "மாஸ்டர் அட்ரெண்டன்" பிரிவில் வேலைபார்த்த தொழிலாளர்கள் சிலர் ஜப்பான் விமானத் தாக்குதலின் போது தங்கள் பதவிகளை விட்டோடினார்கள். இவர்களில் ஓர் பகுதியினர் பணச் செல்வாக்கை உபயோகித்து மறுபடியும் வேலை பெற்றுக்கொண்டார்கள்எனத் தெரியவந்தது. பின்பு நான், வேலைக்கு அமர்த்தப்படாதவர்கள் சார்பாய் அரசாங்கத்துடன் வாதாடினேன். இதைப் பார்த்திருந்த மேற்படி இலாகாவைச் சேர்ந்த பெருந்தொகையான போட்மன்கள் மறுவருடத்தில் தாங்கள் ஆரம்பத்தில் அங்கு வேலைபெறும் பொழுது சட்ட ரீதியற்ற கட்டுப்பண முறைகளைக் கையாடினார்கள் என்று சொன்னார்கள்.

இந்த லஞ்சவழக்கத்தை ஒழிப்பதற்கு எனக்கு உதவிசெய்வதாக அக்காலத்தில் 32 அரசாங்கப் பிரதிநிதிகள் வாக்களித்தனர்.

இப்பெரியார்களும், வேறும் பிரமுகர்களும் துறைமுகத்தில் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் லஞ்ச ஊழல் முறைகளையும், ஆரம்ப கட்டுப்பண அடக்குமுறைகளையும்தொழிலாளர் இவ் அடக்குமுறைகளுக்கு உட்படத் தவறினால் கீழ்க்கா உத்தியோகஸ்தர்கள் இவர்களைத் தண்டிக்கும் அநீதி முறைகளையும், வேலை செய்வதற்கான பொறுப்புக்குத் தக்க சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பன போன்ற உண்மைகளையும் நேரில் அறிந்து ஆச்சரியப்பட்டார்கள்.

தொடர்ந்து திரு தம்பிராஜா சொன்னதாவது:-

1945-ம் வருடம் ஜூன் 18-ம் தேதி அரசாங்க வேலைநிறுத்த இலாகாக்களின் நிலைமையை விசாரணை செய்ய நியமனம் செய்யப் பெற்ற கொமிஷன் முன்பு இத்தொழிலாளர் சார்பாக நான் முறையீடு செய்தேன்.

அக்கமிஷன் 1945-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வெளியிட்ட அறிக்கையில் துறைமுகத் தொழிலாளரின் முறையீடுகளையும் லஞ்ச ஊழல்களையும் விசாரணை செய்ய ஓர் தனிப்பட்ட கமிஷன் நியமிக்க வேண்டுமென்று சிபார்சு செய்தனர். அரசாங்க சபை இதைஅங்கீகரித்து பிரதமக் காரியதரிசியை நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரம் கொடுத்தது. ஆனால் ஒரு வருட"காலம் இந்தச் சிபார்சு கவனிக்கப்படவில்லை.

இதற்கிடையில் டாக்டர் ஏ. பி. டி சொய்சா, அரசாங்க சபையில் இந்த நிலைமையை இட்டு சரமாரியாய்க் கேள்விகள் கேட்டார். இதைப்பார்த்த போக்குவரத்து மந்திரி டாக்டர் சொய்சாவை துறைமுகத்திற்கு விஜயம்செய்து நிலைமையைக் கவனிக்க அதிகாரமளித்தார். டாக்டர் சொய்சா, திரு தகநாயகாவையும் என்னையும் 24-7-45 அன்று துறைமுகத்திற்குக் கூட்டிச் சென்றார்.

துறைமுகக் கமிஷன் தலைவரும், மாஸ்டர் அட்ரெண்டனும் எங்களை அழைத்துச் சென்று காட்டினார்கள். வெளிக் கடலுக்கும் அழைத்துச் சென்றார்கள்.

அநியாகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் எனக் கருதப்படும் தொழிலாளர்களில் ஒருவரின் நிலைமை தூதுக்கோஷ்டி முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எமது கோரிக்கையின்பேரில் அந்த போட்மனுக்கு பரீட்சை நடைபெற்றது. அவர் திறமை வாய்ந்தவரென்றும் முடிவு காணப்பட்டது. ஆனால் அத் தொழிலாளியின் நிலைமை இன்னும் சீர்திருத்தப்படவில்லை.

இதற்குப் பின் அநேக தொழிலாளர்கள் சூழ்ச்சியாய் தண்டிக்கப்பட்டுவந்தனர். இரண்டு தொழிலாளர்கள் காரணமற்று வேலை நீக்கமும் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பின் 1946-ம் ஆண்டு தொழிலாளர் மகாநாட்டின் பயனாக துறைமுகத் தொழிலாளர் புகார்களை ஆராய்வதற்கு அரசாங்கத்தால் திரு வி. ஏ. பி.ஜயசூரியா அவர்கள் விசாரணைக் கமிஷனராக நியமிக்கப்பட்டார்.

1946 செப்டம்பர் 16-ந்தேதி தொடக்கம் கமிஷனர் திரு ஜயசூரியா விசாரணை நடத்தினார். நாங்கள் வாக்குமூலம் அளித்தோம். கமிஷனர் தமது சிபார்சுகள் அடங்கிய அறிக்கையை சென்ற பெப்ரவரி மாதத்தில் பிரதம காரியதரிசியிடம் ஒப்படைத்தார்.

ஆனால் இன்றுவரையும் இவ் வறிக்கையை அரசாங்கம் வெளியிடவில்லை. அறிக்கையை வெளியிட்டு ஊழல்களை நிற்பாட்ட ஆவன செய்யாது அரசாங்கம் தாமதிப்பதேன். இது எவருக்கும் கவலையையே கொடுக்கின்றது.

வைத்திருப்போரைக் கொல்லும் வைரக்கல்

200 வருஷங்களுக்கு முன் திருச்சியிலிருந்து களவு போனது

லண்டன், டிச. 4

200 வருஷங்களுக்கு முன்பு திருச்சிராப்பள்ளியில் ஒரு கோவிலிலிருந்து திருடப்பட்ட ஒரு வைரக்கல், தொடர்ந்து அதை சொந்தமாக்கியவர்களுக்கெல்லாம் துரதிருஷ்டத்தையும் திடீர் மரணத்தையும் கொடுத்து வருகிறது. அதன் சொந்தக்காரியான ஸ்ரீமதி ஆர்லாப், 45 வயதானவர். ரோமாபுரியில் அவர் வீட்டின் 5-வது மாடி ஜன்னலிலிருந்து வீழ்ந்து இறந்தாள். இக்கல் மஞ்சள் நிறமாயிருக்கிறது. இப்பொழுது அதற்கு "ஆர்லாப் வைரம்" என்று பெயர். ஆனால் அதற்கு முன்பு "பிரம்மா"என்றுபெயர். ஒரு கோவிலுள்ள ஒரு பிரம்மா விக்ரஹத்தின் கண்களாக இந்த வைரக்கல்லும் வேறொரு கல்லும் அமைந்திருந்தனவாம்.

கப்பலில் இருந்து தப்பி ஓடிய பிரஞ்சு வாலிபர்

யோகம் பயிலும் ஆசையே பாய்ச்சலுக்குக் காரணமாம்

ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டது

கொழும்பு, டிச. 5

ரோஜர் செமிட்டின் என்ற இளம் பிரஞ்சுக் காரர் ஒருவர் கொழும்பு துறைமுகத்திற்கு வந்த ஒரு கப்பலில் இருந்து மெல்ல நழுவிவிட்டார். அவர் இந்தியா போகும் எண்ணத்துடன் தனுஷ்கோடியில் இலங்கையில் இருந்து இந்தியா செல்லும் ஒரு தோணியில் ஏறிக்கொண்டிருக்கும் போது பொலிசாரால் பிடிக்கப்பட்டார்.

அப்போது இந்தியா சென்று யோகம் பயில்வதற்குத் தாம் ஆசைகொண்டிருப்பதாக அவரால் கூறப்பட்டது. தான் ஓர் பிரஞ்சுக்கப்பலில் வேலைசெய்து கொண்டிருந்ததாகவும், அக் கப்பல் கொழும்புக்கு வந்தபோது தான் மெல்ல அங்கிருந்து நழுவி அநுராதபுரம் சென்று அங்கே ஒரு ஆலயத்தில் ஓர் இரவைக் கழித்த அடுத்த நாள் தலைமன்னார் புறப்பட்டதாகவும் அவரால் கூறப்பட்டது. அவரிடம் இலங்கையில் இறங்குவதற்கு எவ்வித மான அனுமதிச் சீட்டும் இல்லாததால் கொழும்பு கூட்டு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் அவர் ஆஜர் செய்யப்பட்டார்.

எதிரி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதின் பேரில் ரூ. 50 அபராதமும் அதனைச் செலுத்தத் தவறினால்ஒரு மாத கடூழியச் சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

30 வயதுள்ள மேற்படி நபரை பிரான்ஸிற்குக் கப்பல் ஏற்றி விடுவதை பிரஞ்சு சர்க்காரின் இலங்கை ஸ்தானிகர் செய்வார் எனத் தெரிகிறது.

ஐக்கியதேச பாதுகாப்பு சபை

நான்கு விஷயங்களை பரிசீலனை செய்யும்

நியூயார்க், டிச 5

ஐக்கியதேச பாதுகாப்பு சபை செவ்வாய்க்கிழமை பிற்பகல் கூடும் அப்பொழுது பாலஸ்தீன பிரிவினைத்திட்டத்தை அமுல் செய்வதுபற்றியும் இந்தோனேஷியா பிரச்னை பற்றியும், அணுசக்தி பரிசோதனை நடத்த மார்ஷல் தீவுகளை உபயோகிப்பதுபற்றியும், புதிய ஐக்கியதேச ஸ்தாபனத்தில் புதிய அங்கத்தினர்களை சேர்ப்பதுபற்றியும் ஆலோசனை நடைபெறும்.(ராய்ட்டர்)

கோர்ட் முன்பு வாணவேடிக்கை

சட்ட விரோத வெடித் தயாரிப்பின் எதிரொலி

மாஜிஸ்டிரேட் விதித்த உத்தரவு

நீர்கொழும்பு, டிச. 5

சட்ட விரோதமாகத் தயாரிக்கப்பட்டு பொலிஸ பகுதியினரால் கைப்பற்றப்பட்ட பல வகை வாணங்களும், வெடி வகைகளும், இவ்வாரம் முடிவதற்குள் சிறிது சிறிதாகக் கொளுத்தி முடிக்கப்படும். மொத்தம் 20,000 ரூபா பெறுமதியான வாணங்கள் இங்ஙனம் தீர்க்கப்பட இருக்கின்றன. இவ்வாணவேடிக்கை நீர்கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் கட்டிடத்தில் இப்பொழுது நடைபெற ஆரம்பித்து விட்டது. பெருவாரி மக்கள் கூடிநின்று இவ்வாணவேடிக்கையைப் பார்த்து மகிழ்கின்றனர்.

மேற்படி சம்பவத்திற்குக் காரணம் சமீபத்தில் நீர்கொழும்பு மாஜிஸடிரேட்டால் இடப்பட்ட ஓர் உத்தரவே. பொலிஸார் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட மொத்தம் 80 சாக்கு வெடிகளையும், 30 பெட்டி வாணவகைகளையும் கைப்பற்றிச் சம்பந்தப்பட்ட பலரைக் கைது செய்தும் இருந்தனர்.

இங்ஙனம் கைது செய்யப்பட்டவர்களுக்கு ரூபா 100 தொடக்கம், 500 வரை அபராதம் விதிக்கப்பட்டது.

வாணங்களைக் கடலில் அமிழ்த்தினால் மீன்களுக்கு அபாயம் விளையலாம் என்று அஞ்சப்பட்டதே கொளுத்தும்படி உத்தரவிடப்பட்டதற்குக் காரணம் என்றுதெரிகிறது.

பறவை வேட்டையாடுகையில் பரிதாப சம்பவம்

நீரில் மூழ்கி மாண்டார்

அநுராதபுரம், டிச. 5

மதவாச்சி வாடி வீடு மேற்பார்வையாளரான ஆர்தர் ஏ சில்வா பறவை வேட்டையாடுவதற்காக கொழும்பிலிருந்து வந்த ஒரு வேட்டைக் கோஷ்டியினருடன் சென்றதாகவும், வேட்டையாடிக்கொண்டிருக்கும்போது சாகும்படி நேரிட்டதாகவும் தெரியவருகிறது.

அவர் ஆறு பறவைகளைச் சுட்டு வீழ்த்திவிட்டு அப் பறவைகள் நீரில் விழ அவற்றை எடுப்பதற்காகச் சென்றாராம. அதற்கிடையில் நீரில் தத்தளித்து மாளும்படி சம்பவித்தது. சிறிது நேரங் கழித்து அவர் பிரேதம் நீரிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது.

கணவன் முஸ்லிமாகி மலேயப் பெண்ணை மணந்தாராம்

மனைவியின் விவாகரத்துக் கோரிக்கை

ஈப்போவில் இருக்கும் கணவன் மீது யாழ்ப்பாணத்தில் வழக்கு

யாழ்ப்பாணம், டிச 5

மலேயரின் யூனியனில் உள்ள பெராக்கில் ஒரு சுகாதார இன்ஸ்பெக்டராகக் கடமை யாற்றும் ஏ. ராமலிங்கம் அல்லது அப்துல் ரஹ்மான் பின் அப்துல்லா என்பவர் மீது யாழ்ப்பாணம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அவரது மனைவி நவமணி ராமலிங்கத்தால் ஒரு விவாகரத்து வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இதற்குக் காரணமாகப் பிரஸ்தாப நபர் தன்னைவிட்டுப் பிரிந்து ஒரு மலேயப்பெண்ணுடன் வாழ்ந்து வருவதாகக் கூறப்பட்டது.

வழக்காளி தமது குற்றச்சாட்டில் கூறுவதாவது:-

நான் மல்லாகத்தில் வசித்து வருகிறேன். 1936-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதி அளவில் எனக்கும் எதிரிக்கும் ஹிந்து ஆசார முறைப்படி பெராக்கில் உள்ள தைப்பிங்கில் மணவினை நடைபெற்றது. மணத்தின்பின் நாம் ஒன்றாக வாழ்ந்து வந்தோம். எனக்கு மகேசன்என்ற பெயருள்ள 10 வயதுப் பிள்ளை ஒருவன் உண்டு.

1937 பெப்ரவரி மாதம் அளவில் எதிரி என்னைவிட்டுப் பிரிந்து ஒரு முஸ்லிமாகி அஸ்ஸாபீபின்டிஹுஸேய்ன் என்ற மலேய மாதுடன் மணவினை செய்து பகிரங்கமாகக் கணவன் மனைவிபோல் வசித்து வரலானார்கள்.

இப்போ அசைஸ கோர்ட்டில் நான் எதிரிமீது இருதாரக் குற்றஞ்சாட்டி வழக்கு நடத்தினேன். ஆனால் அதில் சில சிறு காரணங்களால் எதிரி விடுதலை செய்யப்பட்டார். ஆகவே விவாகரத்து அனுமதிக்கவேண்டுமென்றும் எனது மகன் மகேசனை என்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் நான் வேண்டிக்கொளகிறேன்.

நீதிபதி 1948 மார்ச்சு 22ம் தேதி எதிரி கோர்ட்டில் ஆஜராகவேண்டுமென உத்தரவு பிறப்பித்துள்ளார். இவ்வுத்தரவு ஈப்போ நீதிபதி ஊடாக எதிரியிடம் சேர்க்கப்படும்.

கொட்டாஞ்சேனை கொலை வழக்கு

மனைவி மீது குற்றச்சாட்டு

எதிரியைப் பார்க்க பெருவாரி ஜனத் திரள்

கொழும்பு, டிச. 5

கொட்டாஞ்சேனைக் கொலை வழக்கு சம்பந்தமாக விசாரணை நடக்கும் என்ற எண்ணத்துடன் பெருவாரி ஜனங்கள் கோர்ட்டிலே நேற்று குழுமி விட்டார்கள்.

இவ் வழக்கிலே இரண்டாவது எதிரியான காலஞ்சென்றவரின் மனைவி பீட்ரிஸ் மாட்செனிவரத்ன என்பவரைப் பார்ப்பதே இக்கூட்டத்தினரின் ஆவலாகும்.

தென் பகுதிப் பிரதம பொலிஸ இன்ஸபெக்டர் ஜனங்களிடம் விசாரணை நேற்று நடக்கமாட்டாது எனத் தெரிவித்ததன் பேரிலேயே கூட்டம் கலைய ஆரம்பித்தது.

இதற்குச் சிறிது நேரங் கழித்து மாஜிஸ்டிரேட் தமது ஆசனத்துக்கு வந்ததும், வழக்குக் கூப்பிடப்பட்டது.

கூண்டில் ஏறிய எதிரிகள் தர்மசேன, ஸ்ரீமதி செனிவரத்ன ஆகியோரிடம் விசாரணை இன்று நடக்கும் என அறிவிக்கப்பட்டது.

சர்க்கார் வரவு செலவு திட்டம் 1947-48

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லாக விலைவாசிகளை யேற்றும் நோக்கமான கைங்கரியங்களைச் செய்கிறார்கள்.

சுங்க வரி அதிகரித்திருப்பது தான் நாட்டிலே பொருள்களின் விலைவாசி ஏறினதற்கு ஒரு காரணம் என்று கூற இல்லை. ஆனால் சுங்க வரியைக் குறைப்பதால் விலைவாசிகளை எவ்வளவோ தூரம் குறைக்கக் கூடும். அந்த முறையைக் கையாளவில்லை'யென்பதே கருத்து.

விலைவாசிகளைக் குறைப்பதற்கு வேறும் அநேக காரியங்கள் கட்டாயம் செய்யவேண்டும். ஆனால் அவற்றைச் செய்யாது வீண் காரியங்களையும் முரண்பாடான காரியங்களையும் செய்கின்றனர். அநேக பொருள்கள் இறக்குமதி செய்வதற்குக் 'கொண்ட்ரோல்'என்ற கட்டுப்பாட்டை விதித்திருப்பதே காரணம். இந்தக் கட்டுப்பாட்டின் நிமித்தம் சொற்பதொகையான மொத்த வியாபாரிகளே தற்போது பொருள்களை இறக்குமதி செய்கின்றனர். இவர்களிடையே இப்போது போட்டி கிடையாது. ஆகவே அவர்கள் பெரிய விகிதமான லாபம் விதிக்கிறார்கள். இந்தக் 'கொண்ட்ரோல்' என்ற சங்கடம் யுத்தத் தேவைக்கும் பிரிட்டனின் வசதிக்குமாக ஏற்படுத்தப்பட்டது. இந்தக் கட்டுப்பாடு இந்தியாவில் மிகவும் சொற்பம். நூற்றுக் கணக்கான சாமான்கள் இறக்குமதி செய்வதற்கு 'லைஸென்ஸ்' என்ற பண்டம வேண்டும். இந்தச் சங்கடத்தை அவசரம் தொலைக்க வேண்டும். அதைப்பற்றி மந்திரிகள் மௌனமாய் இருக்கிறார்கள்.

உள்ளூரிலே உணவுப் பொருள் உற்பத்தியை வாய்ப் பேச்சளவில் ஊக்கம் கொடுப்பதேயல்லாமல் செய்கையில் ஊக்கம் கொடுப்பதாக வில்லை. கட்டாய விலைக்கு ஊரிலே நெல்லை வாங்குகிறார்கள். அந்நிய நாட்டிலேயிருந்தும் அரிசி வாங்குகிறார்கள். அந்நிய நாட்டிலேயிருந்து வாங்கும் அரிசி படி ஒன்றுக்கு 62 சதம் முடிகிறதாம். ஆகவே ஒரு புசல் அரிசி ரூபாய் 19. சதம் 84 ஆகிறது' இதன் பிரகாரம் ஒரு புசல் நெல் 9-92 சதம் ஆகும். ஆனால் உள்ளூர் நெல் அரிசிக்கும் தற்போது இறக்குமதியாகும் நெல் அரிசிக்கும் ஒப்பு உவமையுண்டா? சமானமாக மதிப்பிட்டாலும் உள்ளூர் நெல் ஒரு புசலுக்கு ரூபா 10 கொடுக்க வேண்டும். ஆயின் கட்டாய நெல்விலையென்ன கொடுக்கிறார்களென்று வாசகர்களே கவனித்துப் பார்க்கட்டும். கமக்காரனுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை எத்தனையோ உத்தியோகஸ்தர்களுக்குக் கொழுத்த சம்பளம். 'அலவன்ஸ்' சந்தோஷமாகக் கொடுக்கிறார்கள்.

வேறு என்ன நடத்தையை யூ. என். பி. அரசாங்கத்திடம் எதிர்பார்க்கலாம்,

மகன் மீது அன்பினால் தந்தையார் தற்கொலை

மகனும் தந்தையும் ஒரே நாளில் தகனம்

யாழ்ப்பாணம், டிச. 5

நாச்சிமா கோவில் கிணற்றுள் 42 வயதுள்ள ஒரு தாழ்த்தப்பட்டவரின் பிரேதம் கிடக்கக் காணப்பட்டது.

அவர் பெயர் வேலன் ஐயன் என்றும் அவரது 11 வயது மகன் கோபால கிருஷ்ணனின் நோயே அவரது மரணத்திற்குக் காரணம் என்றும் தெரிகிறது சென்ற சனிக்கிழமை அவரது மகன் பிழைப்பது கஷ்டம் எனக் கூறப்பட்டது. இதனால் துக்கம் மேலிட்ட அவர் திடீரென காணாதுபோய்விட்டார். செவ்வாய்க்கிழமை அவர் பிரேதம் கோவில் கிணற்றில் காணப்பட்டது. அன்றே அவரது மகனும் இறந்ததால் இருவரின் தகனமும் ஒரே நாளில் நடத்தப்பட்டது. [ந-நி]

காலஞ்சென்ற கொக்குவில் கிராமச் சங்கத் தலைவர்

கிராமச் சங்கக் கூட்டத்தில் பாராட்டு

யாழ்ப்பாணம், டிச. 5

கொக்குவில் கிராமச் சங்கத் தலைவரும் சமாதான நீதிபதியும் ஆகியசி. முத்துவேலு அவர்களின் மரணத்தைப் பற்றி கொக்குவில் கிராமச் சங்கத்தில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காலஞ் சென்ற முத்துவேலு கிராமஅபிவிருத்திக்குச் செய்த தொண்டுகளும் அவரது இதர பொதுநல சேவைகளும் மிகவும் பாராட்டப்பட்டன. (ந-நி)



யந்திரங்கள்

அரிசி குத்தும்
யந்திரங்களும்
அதற்கேற்ற
இணைக்
கருவிகளும்

மா அரைக்கும்
யந்திரங்களும்
அதற்கேற்ற
இணைக்
கருவிகளும்

கொஞ்சம் வந்திருக்கின்றன. உங்கள் தேவையைத் தாமதியாது பெற்றுக்கொள்ளுங்கள்.

சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி
லிமிடெட்.,
371, பழைய சோனக தெரு, கொழும்பு. 12.
டெலிபோன் 2341, (3 லயின்கள்)

உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை
அகற்றிவிட்டீர்களா?

நோயை அறிந்து மருந்துண்டால் பிணி விரைவில் அகலுவது நிச்சயம், எனவே உங்களைப் பீடித்திருக்கும் பிணி என்னவென்று அறிந்தீர்களா? இல்லையானால் அதனை அறிய சிவானந்த சித்தர் வைத்தியசாலையின் பிரதம வைத்தியரும் நாடிப் பரீட்சை நிபுணரும் இலங்கையிலும், இந்தியாவிலும் ரோகதெனக் கைவிடப்பட்ட வியாதிகளையெல்லாம் தீர்த்து பெரும் புகழும் கீர்த்தியும் பெற்ற வைத்திய பூபதி AYUR. Dr. V. K. S. செல்லப்பாபிள்ளை M. A., M. S. (கல்கத்தா) அவர்களைக்கண்டு உங்கள் கை நாடியைப் பரீட்சியுங்கள். அவர் உங்கள் நோயை அறிந்து தகுந்த மருந்து கொடுத்து உத்தரவாதமாய்த் தீர்த்துக் கொடுப்பார். அவர் நவம்பர் (19-ம்வ) தொடக்கம் டிசம்பர் 10 உ வரை எமது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோடு, (வின்ஸர் தியேட்டருக்கு அருகாமையில்) யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து நோயாளருக்கு உத்தரவாத சிகிச்சை அளிப்பார். நோய் எதுவானாலும் சரி உத்தரவாதமாக தீர்த்துக் கொடுக்கப்படும். AYUR. Dr. இமானுவேல் ஜோஸப் L. A. M. S. அவர்கள் ஹெட் ஆபீஸ், 92, செட்டியார் தெரு. கொழும்பில் தங்கி இருப்பார். இது சமயத்தை இழாது விடாதீர்கள்.

சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
92, செட்டியார் தெரு, கொழும்பு.
கிளை: 768, லோவர் வீதி, பதுளை.
23/7, ஸ்டான்லி ரோடு, யாழ்ப்பாணம்.

மொத்த வியாபாரிகளுக்கோர்
சந்தர்ப்பம்.

ஷாப்புச் சாமான்களில் உங்களுடைய தேவைகளுக்கு இலங்கையில் இறக்குமதியாளர்களில் முன்னணி வகிக்கும் எங்களை வினவிக்கொள்ளுங்கள். கீழ்க்கண்ட பண்டங்களில் நாங்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்:-

லசிஞ்சர்ஸ், சாக்லேட்ஸ், இங்கிலீஷ் பிஸ்கட் தினுசுகள், டின்பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலீஷ் மருந்துகள், டொய்லட் தயாரிப்புகள், நூல் வகைகள், சிகரெட்டுகள். இன்னும் பலவித சாமான்கள்,

கவனிப்பு:-

அயலூர் வியாபாரிகள் மாதிரிப் பட்டியல் (Pro-forma Invoices) களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

O. N. ASSEN MOHAMED & Co.,
3, Dam Street, COLOMBO.
Grams: "JUST" Phone: 4057

குமாரி சரஸ்வதி கொழும்பு விஜயம்

நேத்தாஜி ராணுவ மாதர் பகுதி காரியதரிசியாக இருந்தவர்

கொக்குவில் இந்துக் கல்லூரி கட்டிட நிதிக்கு சங்கீதக் கச்சேரி நடத்துவார்

கொழும்பு, டிச. 5

குமாரி எஸ். என். சரஸ்வதி, மலேயாவில் நேத்தாஜி சுபாஷ் போஸின் இந்திய ராணுவப் படையின் மாதர் பிரிவுக் காரியதரிசியாகவிருந்து அரும் பெரும் தொண்டாற்றியவர். இவர் சங்கீதக் கலையிலும் நாட்டியக் கலையிலும் இந்தியாவிலுள்ள பல ஆசிரியர்களிடம் கற்றுப்பெருங் கலைத் தேர்ச்சியும் பெற்றுள்ளார். மலேயா வானொலியில் பல முறைகளில் இசை விருந்தளித்து புகழும் பிரபல்யமும் பெற்று விளங்கும் பெருமைக்குரியவர்.

இவரும் இவருடைய சகோதரியாரும், இவர்களால் பயிற்றப்பட்ட மாணவ மாணவிகளும், கொழும்பில் இரண்டு கச்சேரிகள் நடத்துவதற்காகக் கண்டியிலிருந்து நேற்று மாலை இங்கு வந்திருக்கின்றார்கள். இவர்களின் முதற் கச்சேரி, பம்பலப்பிட்டியிலுள்ள அர்ச். பீற்றர்ஸ் மண்டபத்தில், சனிக்கிழமை (6-12-47) மாலை 6-30 மணியளவிலும், இரண்டாவது கச்சேரி, கொழும்பு நகர சபை மண்டபத்தில், திங்கட்கிழமை (8-12-47) மாலை 6-30 மணியளவிலும் நடைபெறும்.

இக்கச்சேரிகளால் வசூலிக்கப்படும் பணம் கொக்குவில் இந்துக் கல்லூரிக் கட்டிட நிதிக்கு உதவப்படும்.

இறக்குமதி வரி அதிகரிப்பு

கொழும்பு, டிச. 5

இறக்குமதி வரிகள் அதிகரிக்கப்பட்டதால் நிதி மந்திரி பட்ஜெட் பேச்சின்போது குறிப்பிடாத பல பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. விளையாட்டுச் சாமான்கள், சைக்கிள்கள் முதலியனவற்றின் வரிகளும் கூட்டப்பட்டுள்ளன.

ரப்பர் டயர்கள், 22அரை சத விகிதத்தில் இருந்து 30 சத விகிதமாக கூட்டப்பட்டுள்ளது.

நிக்கல்: வெள்ளி முலாம் பூசப்பட்ட பொருள்கள் 33—மூன்றிலொன்று சத விகிதத்தில் இருந்து 100 சத விகிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப்பொருள்கள் 30 சத விகிதத்தில் இருந்து 40 சத விகிதமாகவும் குழந்தைகள் விளையாட்டுப் பொருள்கள் 33 அரை சத விகிதத்தில் இருந்து 100 சத விகிதமாகவும், சங்கீதக் கருவிகள் 22 சத விகிதத்தில் இருந்து 45 சத விகிதமாகவும், மின்சார சமையல் கருவிகள் 27அரை சத விகிதத்தில் இருந்து 50 சத விகிதமாகவும், மின்சாரப் பொருள்கள் 16அரை சத விகிதத்தில் இருந்து 17அரை சத விகிதமாகவும், பாத்திரப் பண்டங்கள், ரேஸர்கள், கத்திகள் முதலியன 27அரை சத விகிதத்தில் இருந்து 40 சத விகிதமாகவும், மின்சார விளக்கு பல்புகள் 17அரை சத விகிதத்தில் இருந்து 27அரை சத விகிதமாகவும், மற்றும் விளக்குகள் முதலியன 25 சத விகிதத்தில் இருந்து 35 சத விகிதமாகவும் ஆதரிக்கப்பட்டுள்ளன.

கவர்னருக்கு நன்றி செலுத்தும் தீர்மானம்

நேற்று சமர்ப்பிக்கப் பட்டது

கொழும்பு, டிச. 5

பாராளுமன்ற திறப்பு விழாவன்று மே. த. கவர்னர் நிகழ்த்திய பிரசங்கத்துக்கு நன்றி செலுத்தும் தீர்மானம் செனட் சபையிலும் பிரதிநிதிகள் சபையிலும் நிறைவேற்றப்பட்டிருந்தன. இந்த நன்றி செலுத்தும் தீர்மானங்களை செனட் சபை சார்பாக ஸர். ஒலிவர் குணத்திலகாவும், பிரதிநிதிகள் சபையின் சார்பாக திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவும் கவர்னரிடம் நேற்று காலை 11-30 மணிக்கு சமர்ப்பித்தனர்.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

பாராளுமன்றத்தின் விவாத விமரிசனம்

ஆதிக்கத்தை நிலைநாட்ட யூ. என். பி. களின் சுயவிளம்பரம்

திரு. சுந்தரலிங்கத்தை நம்பியிருந்த திரு. சேனநாயகா ஏமாந்தார்!

மொரட்டுவைதொகுதிபார்லிமெண்ட் அங்கத்தவரான சோமவீர சந்திரசிரி அவர்களின் "நிதாஸ" [3-12-47] என்னும் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது.

பார்லிமெண்ட் ஆரம்பத்திலிருந்து நடந்து வருகிற வாத விவாதங்களை கவனிப்பவர்களுக்கு முக்கியமாக யூ. என். பி அங்கத்தவர்கள் எந்த லட்சியத்திற்காக. திட்டங்களுக்காக பேசுகிறார்களென்று அறிந்துகொள்வது மிகவும் இலகுவாய் இருக்கிறது.

சென்ற வார பார்லிமெண்ட் வாத விவாதங்களில் ஆச்சரியத்தையும் கேலிக்கூத்தையும் உண்டாக்கிப் பேசியவர்களில் அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களே முதல் ஸ்தானம் பெற்றிருக்கின்றனர். இவர்கள் பேசியவைகளில் நூற்றுக்கு தொண்ணூறு வீதம் தம் குடும்பத்து சொந்த விஷயங்கள், தமது செல்வம் செல்வாக்கு ஆகியவற்றை எடுத்துக்காட்டி தமது பதவிகளை பரம்பரையாக வலுப்படுத்திக்கொள்ளுவதாய் இருந்தது.

மேலும் அரசாங்கக் கட்சி அங்கத்தினர்களின் பேச்சுகளிலிருந்து தெரிவதாவது:-

ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றிக்கொள்ளவே தாம் பார்லிமெண்டுக்கு வந்திருப்பதாக காட்டிக்கொண்டார்கள். அப்படி ஏகாதிபத்திய ஆதரவில் தம் குடும்பச் செல்வாக்கை அதிகரித்துக்கொள்ளவும் அதற்காக சேனநாயக்கா மூப்பனாரைப் பாதுகாத்துக்கொள்ளுவதும்தான் அவர்கள் கடமையென்பதையும் தெளிவாக தேச மக்களுக்குக் காட்டிவிட்டார்கள்.

சேனநாயக்கா கபினெட்டைச் சேர்ந்தவர்களில் சுந்தரலிங்கம்அய்யாவைப்பற்றியெல்லாம் யூ. என். பி. கள் மகா மேரு பர்வதம்போன்று எண்ணியிருந்தார்கள். சுந்தரலிங்கம் அய்யா மெத்தப் படித்தவர். பெரிய பட்டதாரி ஆனபடியால் தேசத்திற்கு அவரால் பிரயோஜனப்படக்கூடிய சேவையைச் செய்ய முடியுமென்று சேனநாயக்கா கும்பல் ஓரளவு எதிர்பார்த்தார்கள். எனினும் சென்றவாரம் அவரின் பேச்சைக் கேட்ட மாத்திரத்தில் எதிர்பார்க்கப்பட்ட யாவும், யானை விழுங்கிய விளாங்காயைப் போன்று ஏமாற்றத்தைக் கொடுத்தது. அவர் பேச்சைக் கேட்ட பார்லிமெண்ட் அங்கத்தவர்களும் கலரியில் இருந்தவர்களுக்கும்கூட கேலியாக சிரிக்கததான் செய்தார்கள்.

கணிதப் பேராசிரியரான சுந்தரலிங்கம் அய்யா பெரிய கணக்குக்காரர் என்றே சேனநாயக்கா மூப்பனார் எண்ணியிருந்தார். சுயாதீனக் கட்சியினரை யூ. என். பி. க்குள் இழுத்துவிட சுந்தரலிங்கம் அய்யாவை சேனநாயக்கா மூப்பனார் ஆயுதமாக உபயோகித்துக் கொண்டது அதனால்தான். அந்த முதலாவது தடவையிலேயே அவரின் பெருங்கணக்கு பிழைதது விட்டது. அவரால் நிறுவட பட்ட சுயாதீனக் கட்சியிலிருந்து யூ. என். பி. க்குள் பின்வாசலால் பதுங்கி நுழைய சுந்தரலிங்கம் அய்யா ஒருவர் தான் முன்வந்தார், மற்றவர்கள் மானமிழந்து வாழ்வது தகாது என்று எண்ணினர் போலும்!

பார்லிமெண்டில் இந்த பெருங்கணக்குக்காரர் எதிர்கட்சியினரின் தலை கிறு கிறுத்துப் போகும்படி திறமையாக தர்க்கம் செய்வாரென்று சேனநாயக்கா மூப்பனார் திடமாக நம்பினார். கடைசியில் மூப்பனார் ஏமாற்றமடைந்தே போனார். எனினும் வயிறு குலுங்கச் சிரித்திருப்பார் என்பது நிச்சயம். சிரிப்பை உண்டாக்கக் கூடிய முறையில்-புரிந்து கொள்ளாதபடி-எந்த அம்சத்திலும் சேராதபடி-சாரமற்ற வாத பேசுவதற்கு கொடுக்க வேண்டிய பரிசு ஒன்றிருக்குமாயின் எவ்வித சந்தேகமுமின்றி அப்பரிசை "கணங்கார" "சுந்தரலிங்கம் அய்யாவுக்குத்தான் கொடுக்க வேண்டும். எப்படியாகிலும் சேனநாயக்கா மூப்பனார் வன்னியிலிருந்து கொண்டு வந்த "மாஹ கணங்காரயா" அரசாங்கக் கட்சியின் பெரிய வெடிகுண்டை தாம் இளுப்பாரென்று எண்ணியிருந்தாரெனினும் கடைசியில் அவர்மீது மனம் விட்டுப் போய் இருக்கக் கூடும்!

முதலாவது வாரத்திலேயே இன்றும் ஹாஸ்யமான விஷயங்கள் நடந்திருக்கின்றன. தமிழ் காங்கிரஸ் டிக்கட்டில் பார்லிமெண்டில் நுழைந்து மந்திரி பதவியை பெற்றுக் கொள்ளுவதற்காக தன் கூட்டத்தாரை விட்டு வந்த சிற்றம்பலம் அய்யாவுக்கு தன்னிலையற்ற நிலைமையில் சுவாசம் இழுக்க நேரிட்டது. தமிழர் சேனைபதி திரு. பொன்னம்பலத்திற்கு எதிராக அர்த்தமற்ற சாக்கு போக்குகளை சொல்ல முயற்சித்தாரெனினும் திரு. பொன்னம்பலம் விடுத்த சவாலுக்கு எதிர் நிற்க முடியாமல் தள்ளாடின சிற்றம்பலம் அய்யாவின் நல்ல பெயரும் போய் சாயமும் வெளுத்து விட்டது.

சில சந்தேகங்கள்

சுதந்திர மசோதா பற்றி ஓர் கருத்து

கொழும்பு, டிச. 3

இலங்கை சுதந்திர லீகின் காரியதரிசி பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்:-

இன்னும் சில நாளில் பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கை சுதந்திர மசோதாவை சட்ட புஸ்தகத்தில் இடப் போகிறது

இலங்கை அரசாங்கம் இம்மசோதா பரிபூரண சுதந்திர அந்தஸ்தை-அதாவது ஒரு டொமினியனின் பூரண அந்தஸ்தைத் தருவதாகக் கூறி வருகிறது. பிரிட்டிஷ குடியேற்ற நாட்டு மந்திரியோ கெட்டிக்காரத்தனத்துடன் நிலைமையை விளக்காது விட்டுவிட்டார். செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும் மசோதாவையும் எடுத்துப் பார்த்து எமது பிரதம மந்திரியார் கீழ்க்கண்ட விஷயங்களைத் தெளிவு படுத்துவாரா?

1. பிரிட்டன் ஒரு யுத்தத்தில் ஈடுபடும்போது இலங்கை நடுநிலைமை வகிக்க முடியுமா?

2. பிரிட்டனால் தனக்கென ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் கடல் தளங்கள், விமானத்தளங்கள், ராணுவத் தளங்கள் ஆகியனவான-இவற்றின் மீது எமது அரசாங்கத்துக்கு எவ்வித ஆணை இருக்கும்?

3. அயல் நாட்டு வர்த்தகம், கப்பல் போக்கு வரத்து, நாணயச் செலாவணி ஆகியவை சம்பந்தமாக பிரிட்டனால் விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் யாவை?-இவற்றை எமது அரசாங்கத்தால் நீக்க முடியுமா?

4. எமது அரசாங்கத்துக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் செலுத்தவேண்டிய கடன் தொகை என்ன? -இதனை அவர்கள் செலுத்துவது சம்பந்தமாக நாம் எவ்விதம் விட்டுக் கொடுத்திருக்கிறோம்?

கால்கட்டுடன் கூடிய சுதந்திரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தை ஆதரிக்கமுடியாதென்றும் கிடைக்கும் சுதந்திரம் உண்மையானதுதான் என்பதை அரசாங்கக் கட்சித் தலைவர் நிரூபிக்கவேண்டுமென்றும் கூறினார்.

செனட்டர் ஸி குமாரசுவாமி பேசுகையில் தாம் தீர்மானத்தை ஆதரிப்பதாகக் கூறினார்.

செனட்டர் கொத்தலாவல பேசுகையில் எதிர்க்கட்சியினர் பேசியது பற்றி குறிப்பிட்டு விட்டு பிரிட்டிஷார் வழங்குவதை எடுத்துக் கொண்டு அதற்காக குதூகலிக்க வேண்டியதுதான் என்று கூறினார்.

செனட்டர் விக்டோரியா பேசுகையில் இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு தகுதியுண்டு என்றும் கிடைத்துள்ள சுதந்திரத்துக்காக தாம் சந்தோஷப் படுவதாகவும் இத்தீர்மானத்தைத் தாம் ஆதரிப்பதாகவும் கூறினார்.

செனட்டர் ஜினதாஸா

செனட்டர் ஜினதாஸா பேசுகையில், சுதந்திரத்தை விரும்பும் மக்களுக்கு வழங்கப்படும் சுதந்திரத்தில் கால் கட்டுகள் வேண்டாமென்றும் கால் கட்டுகளுடன் உள்ள சுதந்திரம் உண்மைச் சுதந்திரமாக மாட்டாதென்றும் இந்தத் தீர்மானத்தை தாம் ஆதரிக்க முடியாதென்றும் கூறினார்.

செனட்டர் பெரேரா

செனட்டர் டி. டபிள்யூ பெரேரா பேசுகையில் கூறியதாவது:-

சுதந்திர மசோதாவைப்பற்றி பலரும் பலவிதமாக கூறினர்கள். உலக யுத்தத்தில் கலந்து கொண்டதால் சுதந்திரம் கிடைத்துள்ளதென்றனர் ஒரு சிலர். யுத்த காலத்தில் எங்கள் உயர்தர அதிகாரிகள் சில சமசமாஜிகளை சிறையில்தள்ளி 'நல்லபிள்ளைகள்' என்று பேர் எடுத்ததால் சுதந்திரம் கிடைத்ததென்றனர் ஒரு சிலர். திரு சேனநாயகாவும், ஸர். ஒலிவர் குணதிலகாவும் பாடுபட்டு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளனர் என்றனர் வேறு சிலர். ஆனால் என்னவிதமான சுதந்திரததை நாங்கள் பெறப்போகிறோமென எனக்கு அறிய முடியவில்லை. இந்த தீர்மானத்தை என்னால் ஆதரிக்க முடியாது.

செனட்டர் பாண்ஸ ரத்வத்தை பேசுகையில் கிடைத்துள்ள சுதந்திரத்துக்காக சந்தோஷப்பட வேண்டுமென்றும் இலங்கைக்காக முழுமனதுடன் வேலை செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

செனட்டர் இராஜேந்திரா பேசுகையில் இலங்கை எல்லோருக்கும் சொந்தமென்றும் தாம் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும் கூறினர்.

செனட்டர் ஸி. டி. சொய்ஸா பேசுகையில் தாம் இந்த தீர்மானத்தை ஆதரிப்பதாக கூறினர்

செனட்டர் ஸர். ஒலிவர் குணத்திலகாபேசுகையில் இலங்கை முன்னேறியுள்ளதென்றும் தொடர்ந்து முன்னேற்றமடையுமென்றும் சில அங்கத்தினர் இந்த தீர்மானத்தை நிராகரித்து விட்டது மனவருத்தத்துக் கிடமாயிருப்பதாகவும் கூறினர்.

திருத்த தீர்மானம் தோல்வி

திருத்தப் பிரேரணை மீது தலைவர் முதலில் வாக்கெடுத்தபோது ஐந்துபேர் சாதகமாகவும் 21பேர் பாதகமாகவும்வாக்களித்தனர். தீர்மானம் தோல்வியுற்றது.

இதன்பின் தலைவர் அசல் தீர்மானத்தின்மீது சபையில் வாக்கெடுத்தபோது அதனை ஆதரித்து 21 வாக்குகளும் பாதகமாக 5 வாக்குகளும் கிடைத்தன. அசல் தீர்மானம் நிறைவேறியது. சபை நடவடிக்கை 1948ம் ஜனுவரி 13-ம் தேதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தலைவர் சபையில் அறிவித்தார்.

'பர்மா ராணி' சினிமாப் படத்துக்கு தடை

சென்னை, டிச. 4

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் கம்பெனியாரால் தயார் செய்யப்பட்ட "பர்மா ராணி" என்னும் சினிமாபடம் இம்மாகாணத்தில் அனுமதிக்கப்படாத படம் என்றும் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக சர்க்கார் அறிவிக்கிறது.

ரோட்டரி கவர்னருக்கு கொழும்பில் விருந்து

"தென்னிந்தியாவுக்கு இலங்கை இயக்கம் முன்மாதிரியானது"

கொழும்பு, டிச. 5

இலங்கைக்கும் தெற்கு சென்னை மாகாணத்துக்கும் ரோட்டரி கவர்னராக இருக்கும் திவான் பகதூர் ஸி. எல். இரத்தின சபாபதி முதலியார் இலங்கைக்கு விஜயம் செய்ததை முன்னிட்டு கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை கொழும்பு ரோட்டரி கிளப்பு ஒரு விருந்தளித்தது. திரு முதலியார் இலங்கைக்கு நவம்பர் 27-ம் தேதி வந்திருந்தார். பல பகுதிகளிலும் டிஸ்டிரிக்ட் ரோட்டரி மகாநாடுகளைக்கூட்டி பல விஷயங்களைப்பற்றியும் ஆலோசனை செய்துள்ளார். திரு முதலியார் பேசுகையில் இலங்கை ரோட்டரி இயக்கம் பெருந் தொண்டுகள் புரிந்துள்ளதென்றும் தென்னிந்தியாவுக்கு இந்த ரோட்டரி இயக்கம் ஒரு முன்மாதிரியாக இருப்பதாகவும் கூறினர். பின்னர் ரோட்டரி இயக்கம் செய்யப்போகும் வேலைகள்பற்றியும் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற காலரிக்குள் புகு தந்திரமான முறைகள்

ஒழிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை

கொழும்பு, டிச. 5

பாராளுமன்ற நடவடிக்கைகளின் போது காலரிகளில் கட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கே ஆட்களை அனுமதிக்கப்பட்டு வரப்படுகிறது. இப்பொழுது டிக்கட்டுகள் மூலமே ஆட்கள் அனுமதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பிரதிநிதிக்கும் இரண்டு டிக்கட்டுகள் உள்ளன. இவம்முடன் காலரிகள் வருபவர்கள் தாங்கள் காலரிக்கு வந்த பின் தம்மிடம் உள்ள டிக்கட்டுகளை தங்கள் சகாக்கள் மூலம் வெளியில் அனுப்பி வெளியில் இருப்பவர்களையும் உள்ளே அழைத்துக்கொள்ள தந்திரமான முறையைக் கையாளுகின்றனர் என்று கூறப்படுகிறது.

சிலர் கொண்டுவரும் கடிதங்களில் அங்கத்தவர்களின் கையொப்பங்கள் கள்ளத்தனமாக வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் சமீபத்தில் இவை கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் கூறப்படுகிறது. இதனை இல்லாது ஒழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஜிந்துபிட்டியாவில் இப்பொழுது
தினசரி மாலை 6 மணி, இரவு 9—30 மணிக்கு
மாஸ்டர் விந்தால், மிஸ் ஜெனவாபவர் மற்றும் பலர் நடிக்கும்
"ஆசியாவின் நட்சத்திரம்"
என்ற சிறந்த பேசும் படக்காட்சி காட்டப்படும்

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்குஇணையற்றது
தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள் :—
ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டி ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்
தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.
ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை.

ஐசிங் சுகர்
இலங்கையில் முதல்தரமானது
குயின் (ராணி) மார்க்.
இப்போ எங்களுக்கு ஏற்பட்ட சில வசதிகளால் விலை மிகவும் குறைக்கப்பட்டு இருக்கின்றது.
7 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 160-00
28 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 150-00
எங்கள் ஸ்டோர் நிர். 307, செட்டியார் தெருவில் (சீ ஸ்டிரீட்) எடுத்துக்கொள்ளலாம்.
குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி,
861, அளுத்மாவத்தை ரோடு,
முகத்துவாரம்,
கொழும்பு.
தந்தி "Confection" போன்: 4511

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த
கன்னிகா
தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
"இழந்த உறுதி"
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 6-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.